

ஐந்து முனாஜாத்து

ஷெய்க் அப்துல்காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவர்

Qadhiriyathul Idhroosiya Trust , Madurai
+91 9443125786


ஹஜ்ரத் ஷேக் சுல்தான் அப்துல் காதிர்
நயினார் லெப்பை ஆலிம் புலவர் வலியுல்லாஹ் (ரலி)
(புலவர் நாயகம்)

هو

ஷெய்க் அப்துல்காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவரின்

ஐந்து முனாஜாத்து

Kaleelur Rahman Qadhiri
kaleelurrahmanqaadiri@gmail.com
91- 9443125786

First Edition: October'2025

Qadhiriyyathul Idhroosiya Trust.
21/12, Little flower street ,
Third Floor ,
Balaji Nagar,Madurai-625005 ,
Tamilnadu state , India .
91-8189890130/whatsapp
qadhiriyyathulidhroosiya@gmail.com

23rd September-2025/ Rabbiyul Aaqhir-1

Price: 150/-

Gpay: 9443125786 / 8825800892

Copies available @ Nagore Ajmir book store 9443621187

Pages:68+4

உள்ளுறை

	உறை	பக்கம்
1	நூன்முகம்	*3*
2	ஹிளிறு நபி - ஒருபா ஒரு பஃது.	*8*
3	நபியுல்லாஹ்:	
	ஒருபா ஒரு பஃது.	*10*
	முனாஜாத்து.	*12*
	இன்னிசை.	*17*
4	முஹ்யித்தீன் ஆண்டகை:	
	முனாஜாத்து.	*19*
	இன்னிசை.	*24*
	ஆசிரிய விருத்தம்.	*26*
5	நாகூர் ஆண்டகை:	
	முனாஜாத்து.	*30*
	அட்டகம்.	*35*
	அகவல்.	*36*
	சிலேடை மாலை.	*37*
6	ஹக்கு பேரில் முனாஜாத்து	*38*
7	கதிர்காமம் ஹிள்று நபி தர்ஹா.	*41*
8	ஹிளிர் நபி ஸியாரங்கள்.	*45*
9	ஹிளிர் நபி துஆக்கள்.	*64*

நூன்முகம்

اللَّهُمَّ أَسْعِفْنَا بِحَضْرَتِهِ ﷺ
اللَّهُمَّ أَسْعِدْنَا بِحَضْرَتِهِ ﷺ
اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى الذَّاتِ الْمُحَمَّدِيَّةِ وَالْآلِ، وَاغْفِرْ لَنَا مَا يَكُونُ وَمَا قَدْ كَانَ

"புலவர் நாயகம்" / "ஷேகனாப் புலவர்" / "நாயகப் புலவர் / *(16அவதானங்கள் புரிந்ததால்)* ***"சோடசாவதானி"*** *...எனப் புகழ் பெற்ற* ***ஷெய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் இப்னு ஹபீபு முஹம்மது லெப்பை காஹிரி இப்னு மானாப்பிள்ளை ஆலிம் இப்னு காதிறுப் பிள்ளை*** *......* ***இப்னு ஸதக்கு நயினார் ஆலிம்*** *(மஹ்தூம் தெரு) அவர்கள்-* ***கீழக்கரை ஸெய்யித் அப்துல் காதிர் தைக்கா ஸாஹிபு வலியுல்லாஹ்*** *அவர்களின் ஆன்மீக மாணவர் ஆவார்.*

மாபெரும் புலவராகவே இவர்களைக் கண்ட தமிழ் கண்கள்-இவர்கள் ஞானவாரிதி என்பதை அவதானிக்கத் தவறிவிட்டன, என்பது வரலாற்றுப் பிழையே.

புதுஹுஷ் ஷாம் @ சிரியாவின் வெற்றி, ***(இப்ராஹீம் நபி)*** *திருமணி மாலை,* ***குத்பு நாயகம்****, (நாகூர்)திருக் காரண புராணம் @ 4 இஸ்லாமிய தமிழ் காவியங்களைப் படைத்த ஒரே தனிப்பெரும் புலவர்.*

தவிர, கோத்திர மாலை, சுவர்க்க நீதி, நாகை அந்தாதி...உட்பட வண்ணங்களையும், பதம், மெல்லிசை, வல்லிசை, வண்ணங்கள், கும்மி, சீட்டுக்கவி, சரமகவி, ***(நபிநாயகம்)*** *சத்குரு சங்காரம், மாலை மாற்று(as same as reversal lyrics), (நாகபந்தம், அஷ்ட நாகபந்தம், இரத பந்தம், கமலபந்தம் @) சித்திரக்கவிகளையும் புனைந்துள்ளார்.*

1) ***<u>புதுகுஷ் ஷாம்:</u>*** *(முஹம்மதிய்யா + ஸித்தீகிய்யா + ஃபாரூகிய்யா @) 3காண்டம்/61படலம்/6786செய்யுள்-ஹிஜ்ரி 1236 ரஜப்-10ல் பாடி, 13.4.1821ல் அரங்கேற்றப்பட்டது. 1844ல் கையெழுத்துப் பிரதிகள் தயாராயின.*
2) ***<u>திருக்காரணப் புராணம்:</u>*** *3காண்டம்/56படலம்/2576செய்யுளுடன் 9.9.1812(ஹிஜ்ரி 1227 ரமழான் 1)ல் அரங்கேற்றப்பட்டது. 1863ல் அச்சுவாகனம் ஏறியது.*

3) **குத்பு நாயகம்:**1341பாடல்களில் ஹிஜ்ரி 1225ல் பாடப்பட்டு 15.10.1810 (ஹிஜ்ரி 1225 ரமழான் 1)ல் அரங்கேற்றப்பட்டது.
4) **திருமணி மாலை:**2காண்டம்/31படலம்/2044பாக்களுடன் 9.9.1816(ஹிஜ்ரி 1231 ஷவ்வால் 14)ல் அரங்கேற்றப்பட்டது.
5) **(நபி)கோத்திர மாலை:**149 செய்யுள்.
6) **சொர்க்க நீதி:**33 பாடல்கள்.
7) **(சுகப்பிரசவ)பூபாளைக் கண்ணி:** 20செய்யுள்.

ஹிஜ்ரி 1260ல் காலரா நோய் நிவாரணிக்காகப் பாடிய **பனுவல்-அனுபவ** ரீதியாக பலன் நல்கப் பெற்றது.

நாகை அந்தாதியை பொருளுடன் 1843ல் அச்சிட்டுள்ளார்.

ஆக ,இவர்கள் புனைந்த மொத்த பாடல்களின் எண்ணிக்கை-14347.

இவர்களைக் குறித்து-30பாடல்களில் "**தோத்திர மாலை**" ஒன்றை, செவத்த மரைக்காயர் பாடியுள்ளார்.

"**வித்தையிற் தோழன்**" என இவர்களை-**குணங்குடியாரும்** வழுத்தியுள்ளார்.இருவருக்கும் குருநாதர் ஒரே நபர்தான்.

குணங்குடியாரின் பாடல்களுக்கு இவர்களும்- வாயுறை வாழ்த்து,ஒருபா ஒரு பஃது, தோத்திரப்பாக்களை வழங்கியுள்ளார்.

ஓலைச் சுவடிகளைச் சேகரித்து -பெரு முயற்சியுடன் கிபி 1842/ஹிஜ்ரி 1258ல் சீறாப்புராணத்தை முதலில் அச்சேற்றிய பெருமைக்குச் சொந்தக்காரர்.

இவர்கள் (ஒரே நேரத்தில் பல்லிடங்களில் காட்சி நல்கும்) "**அப்தால்**" பதவியை எய்தப் பெற்றவர்கள் ஆதலால்-இவர்களுக்கு வாரிசு பிறக்காது என,காயல் **தைக்கா ஸாஹிப் வலியுல்லாஹ்** அவர்கள் கூறியது போலவே ,நடந்தேறியது.

குர்ஆனை முழுமையாக பாராயணம் செய்த இவர்கள்-சமஸ்கிருதம் பார்ஸி அரபி மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள்.

இவர்கள் கைப்பட பிரதி எடுத்த- ஃபுஸூஸுல் ஹிகம், இன்ஸான் காமில் நூற்கள்,காயல் மஹ்ழராவில் உள்ளன.

கீழக்கரை அப்துல் காதிர் தைக்கா ஸாஹிபு+ **காயல் அப்துல் காதிர் தைக்கா ஸாஹிபு**+ **அப்துல் காதிர் குணங்குடி மஸ்தான்**+ **மலப்புரம் அப்துல்காதிர்** ஆகிய *4*பேருடன் இணைந்தும், ஒருமுறை தனியாகவும் ஹஜ்ஜு செய்துள்ளார்.

குஞ்சுமூசு, **பத்ருத்தீன்,** **வண்ணக் களஞ்சியம்**, ***அருள்வாக்கி***, **இராமலிங்க வள்ளலார்** , ***ஆறுமுக நாவலர்***...போன்ற புலவர்கள்-இவர்களது சமகாலத்தவர்.

காரணக் கர்த்தாவான முஹ்யித்தீன் ஆண்டகையின் அற்புதங்களைக் கருவாகக் கொண்டு *1855(hijri 1271)* ல் பாடப்பட்ட - "**நவமணி மாலை**" காப்பியத்தை இயற்றிய-காலங்குடியிருப்பு ஐதுரூஸ் நயினார் புலவர் அவர்கள்,ஷேகனாப் புலவரின் மாணாக்கரே.

தமிழக-இலங்கையின் பல பாகங்களிலும் சுற்றியதை-பல பாக்களில் விரிவாக வடித்துள்ளார்.

ஹிஜ்ரி *1207*/கிபி *1792*ல் பிறந்த இவர்கள்- *12.09.1852*/ ஹிஜ்ரி *1268* துல்கஃதா பிறை *27* திங்கள் இரவில் மறைந்து-சென்னை இராயபுரம் குணங்குடி மஸ்தான் ஆண்டகையின் அண்மையில் அடங்கப் பெற்றார்கள்.

ஹஜ்ஜு பிரயாணத்தில் இயற்றப்பெற்ற "***மக்கா கலம்பகம்***" நூலிலிருந்து ஒரு தவப்பாடல் வருமாறு:

முந்த வினை-வந்த வினை-எந்த வினை சிந்தி விழ,
முக்கிய நல்லருள் புரிவையே!
முச்சுடரின் நின்ற மனை-மெய்ச்சுடர் எனும் தகைய-
முத்தி தருகின்ற பொருளே!.

இயற்றிய காரணத்தின் எழிலுறுங் கருத்துப் பற்றி,
முயற்றவத் துறை குலாவு **முஹ்யித்தீன்** என்னுங் கொண்டல்,
பயிற்று மெய்ப் பாதங் கொண்டோர்-பதவி மேல் வரங் கொள்வாரால்,
குயிற்று நற்புராண நாமங் "**குத்பு நாயகம்**" என்றாமே***(கு.நா/க.வா:26).***

ஆரணப் பொருளின் நுட்பத்து அறிவெலாம் விளைந்த சிந்தைப்,
பூரணப் பொலிவின் நின்ற புகழ் அப்துல்காதிர் என்னும்,
வாரணத்து அரசர் போற்றும் வள்ளலால் சரிதை பண்பாற்,
"**காரணப் புராணம்**" என்னா கனதியின் நாமம் இட்டான்***(தி.கா.பு/க.வா:30).***

இவர்களது அதரங்கள் மூலம் வெளிவந்ததே- "**ஐந்து முனாஜாத்**" என்ற அற்புதப் படைப்பு.

இதில் "**அல்லாஹ்-றஸூல்-முஹ்யித்தீன்-நாகூர் ஆண்டகை-ஹிளிறு நபி**" @ ஐவரையும் இறையருள் பெறுவான் வேண்டி-*12* பிரபந்தங்கள் இசைத்துள்ளார்கள். அதன் விபரம் வருமாறு:

1. **ஹிளிறு நபி - ஒருபா ஒரு பஃது.**
2. **நபியுல்லாஹ்:**
   a. ஒருபா ஒரு பஃது.
   b. முனாஜாத்து.
   c. இன்னிசை.
3. **முஹ்யித்தீன் ஆண்டகை:**
   a. முனாஜாத்து.
   b. இன்னிசை.
   c. ஆசிரிய விருத்தம்.
4. **நாகூர் ஆண்டகை:**
   a. முனாஜாத்து.
   b. அட்டகம்.
   c. அகவல்.
   d. சிலேடை மாலை.
5. **ஹக்கு பேரில் முனாஜாத்து.**

இதில் இடம்பெற்றுள்ள செஞ்சொல் "**ஹக்கு பேரில் முனாஜாத்து**"- விஷபேதிகள் பறந்தோடுவான் வேண்டி பாடப்பெற்றது.இது அனுபவப் பூர்வமான கைக்கண்ட மருந்து.
ஐந்து முனாஜாத்தில் இடம்பெற்ற அற்புதமான -சில பாடல் வரிகள் வருமாறு:

ஷவ்னுஞ் சூழும் பெரும்பொருளே! ஷைகுல்-மஷாயிகாகி நிற்குங்,
கவுனுள் அடங்கும் மஹ்லூக்குக்கு கருத்துங் காட்டும் ஷுஹூதுடையீர்,
கவனம் யாவும் அணுகாமற்- காக்குங் கிருபை நிறை கடலே,
தவமுந் தகுதி உடையவரே- ***ஷாஹுல் ஹமீது நாயகமே!.***

ஹபீபும் நீரே! ஜிஸ்மும் நீரே! ஐனும் நீரே! ஃகல்பும் நீரே!,
ஸுப்ஹும் நீரே! மிதாலும் நீரே! கன்ஸும் நீரே! ஃகர்ளும் நீரே!,
அப்தும் நீரே! அசலும் நீரே! ஆலிம் நீரே! [1]இல்மும் நீரே!,
ஹப்றும் நீரான கோவே! ***கௌது யா முஹ்யித்தீனே!.***

*மஹ்லூக்கு எல்லாம் பரவிய "**கருவாய்**" தோன்றி....*
*"**மூவா உரு**" ஒன்றாய் நின்ற....*
மூலக் "காரணமாய்" நின்ற....
*முஹம்மது **நபியுல்லாஹ்வே!***

தொன்மையான அரபுத்தமிழ் நூலுடன் இதர தமிழ் நூற்களை ஒப்பிட்டு-வழு நீக்கி இந்நூலைப் பதிப்பித்துள்ளோம்.

கஸீதா @ ஞானப் பாடல்களில் மட்டுமே ,சரியையில் மறைக்கப்பட்ட இமாலய ரகசியங்களை ரசித்து ருசிக்க இயலும்,என்பதற்கு இந்நூலே சாட்சி.

உரையில்லாத ஞானநூல்கள்-விழலுக்கு இறைத்த நீராகையால், இயன்றளவு முக்கிய பதங்களுக்கான அர்த்தங்களை இடம்பெறச் செய்துள்ளோம்.

*23.9.2025 ர.ஆகிர் பிறை ஒன்றில் மதுரையில் நிகழ்ந்த "**குத்பு நாயகம்**" நிறைபிறை மௌலித் / " **ஞானப்புகழ்ச்சி முற்றோதுதல்**" நிகழ்வில் -இந்நூலை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்வு கொள்கிறோம்.*

> ***சொந்தமுடன் முந்த ஒளிவு "முதலோன் முஹ்யித்தீனும்" -***
> ***என்றன் இடத்து இருக்கும் என் இறையே!***
> *-பீரப்பாவின் ஞானப்பூட்டு:28.*

اللَّهُمَّ ارْزُقْنَا نِعْمَةَ الْوَنَسِ وَالْأُنْسِ وَالْمُؤَانَسَةِ وَالِاسْتِئْنَاسِ، وَلَا تَحْرِمْنَا بِجَاهِ سَيِّدِنَا الْحَبِيبِ الْمُصْطَفَىٰ ﷺ

-டாக்டர்.முஹ்யித்தீன் கதீஜா காதிரி.
New Delhi.

ஐந்து முனாஜாத்து

ஹிள்று நபி பேரில்- ஒருபா ஒருபஃது

(Allama Sheiq abdul qaadhir nayinaar lebbai aalim pulavar qaahiri)

திருவாய் உலகம் அனைத்தினுக்கும் சிறந்த ஒளியாய்த் தெளிவாகி,
மருவாய் எவையும் மிக மருவு மலிந்த உயிர்களிடை அரிய,
கருவாய் அமைந்த வல்லவன்தன் கருணை நபியாய் எந்நாளும்,
உருவாய் உயிராய் நின்றோங்கும் உண்மை **ஹிளிறு நன்னபியே-*1*.**

எரியுன் திரை சூழ் புவியிடத்தில் இருக்கும் ^மனுடர் பல்லருக்கும்,
அறியும் பொருளாய்க் காத்தோம்பி அரிதாய் நோக்கும் பெருங்கருணை,
செறியு மதியீர் வண்மையெலாஞ் சிறந்த கரத்திற் கரம் உணராச்,
சிறியார்க்கு அன்பு மிகவுதவும் தெளிவே! **ஹிளிறு நன்னபியே-*2*.**
(^மனிதர் ; ^துடரின் ; <பவத்தின்)

உள்ளமெல்லாஞ் சோர்வுற்று அறிவு மதி கலங்கி,
இடரின் உழன்ற சிறியவர்கட்கு இனிதின் எதிர் வந்து உரைத்தருளும்,
>மடல் சேர் பெருமையுடையீர் -எம் அகத்து உலவும் திரு ஒளிவே!,
*கடல் சூழ் தீவு மற்றிடமும் காக்கும்-***ஹிளிறு நன்னபியே-*3*.**
^தொடரின் ;<பாவம். ;>பூவிதழ்.

எண்ணங் கலங்கி நினைவிழந்தே இரங்கும் ^பற்று ஒன்றில்லாமல்,
வண்ணங் கலங்கு மரக்கலத்தும் வந்து ஆதரவும் செய்யுங் கோவே,
பண்ணும் இழிவு கோலத்திற் பலர்க்கும் அரியவொரு கப்பல்,
நண்ணும் பகைஞர்தமைக் காக்கும் நலஞ்சேர் **ஹிளிறு நன்னபியே-*4*.**
(^பந்தம்.)

மெய்மையுடைய ஒலிமார்கண் மேன்மை புரியராக இறை,
அமையவே இனிதம் அருளி அழகாம் பெருமை தரும் கோவே,

^கைமையுடைய மூஸாதம் கருத்தின் மகிழ வல்லோனும்,
செய்மை அறிவின் மிகப் போற்றும்- சிறந்த ***ஹிளிறு நன்னபியே-5****.*
(^அமங்கல.)

காற்றும் கடலும் ^உறு குறிப்பும் காணாதிருக்கும் அப்போதும்,
வேற்று <துறையும் அறியாத வேளைதானும் ஆதரிக்கும்,
>தேற்றப் பொருளே! நிலை உயிரின் சிறந்த புனலே! மிக உண்டு,
போற்றப் பொலிந்த மணிவிளக்கே! புகழ்சேர் ***ஹிளிறு நன்னபியே-6****.*
(^மிகுதி ; ^புகலிடம் ; >நிச்சய, தெளிவு.)

அச்சம் அகற்றி- துயர் அகற்றி -அகந்தை அகற்றி மேனிலையின்,
இச்சை பெறவே உதவி புரிந்து இன்பம் அருளும் மணிமதியே,
உச்சப் பொருளால் °படுஞ்சுவரை உயர நிறுத்தி மேல் நடக்கும்,
^விச்சை விளக்கு நாயகமே! <வென்றி ***ஹிளிறு நன்னபியே-7****.*
(^அறிவு ; <வெற்றி ; °அனாதைகளின் பொருள் பொதிந்த சுவரை கட்டிய சம்பவம்.)

^வாரியிடத்தும் மலையிடத்தும் வனங்களிடத்தும் தீவு இடத்தும்,
பாரினிடத்தும் மற்றிடத்தும் பாதுகாத்து <நிற நோக்கும்,
>காரின் அனைய கொடைக் காக்க- கையைக் கொடுத்து விலை பட்டுச்,
சீரீன் மீண்ட பெருமானே! செய்ய ***ஹிளிறு நன்னபியே-8****.*
(^கடல் ; <சீர்பட ; >நீர் மேகம்.)

வாசமருவு முளைத்தாலும் மலர்ந்த வரிசையொரு வேந்தன்,
நேச மருவுற அமைத்தாய்- நினைவில் நின்ற அறிவுடையீர்,
பாசம் அகலா எளியோர்கள் பரத்தின் ஆளும் மிக ஆய்ந்தே,
தேசம் புகழக் காத்தோங்கும் ^தேவே! ***ஹிளிறு நன்னபியே-9****.*
(^தெய்வீகம்.)

கரையும் கடலும் காட்டு அகத்தும் கலந்து- இரண்டு கடலிடத்தும்,
தரையின் நிலவும் பெருங்கோவே! தவத்திற் சிறந்த நாயகமே,
^அரையர் எவர்க்கும் பேரரசாய்-அரிய பொருள்கள் கைப்படுத்தி,
நிறையின் மனுடர்தமைக் காக்கும்-நீத ***ஹிளிறு நன்னபியே-10****.*
(^அரசர்.)

திசையில் எவனும் செல்லிடத்தும் திகைத்து அவ்விடத்தும் எளியவரை,
^நகை கொண்டு உதவி புரிந்து ஆளும்-அன்பு பெருகும் பேரரசே,

இசையும் பொருள் அகம் உணர்ந்தே-என்றும் உயிர் பெற்று இனிதிருக்கும்,
<பசை கொள் நிதியே! >உண்-மதியே! பலனே! **ஹிளிறு நன்னபியே-*11*.**
(^களிப்பு ; <அன்பு,பற்று ; >போஜன.)

□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□

ஷெய்க் அப்துல்காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவரின்-
நபியுல்லாஹ் பேரில் ஒருபா ஒரு பஃது

கட்டளைக் கலித்துறை

சந்தத் திருப் ^பயத் தாமரை <நாதன் தன் வல்லமையாற்,
சுத்தத் திருப்பயத்தால் மனத்திற் தொடர் காந்தமதிற்,
பத்தத் திருப்பயத் தாமரு நேசப்பலன் அருள்வீர்,
முத்தத் திருப்பயத் தாமரைப் பாத ***முஹம்மதுவே!-1*.**
(^அமிர்த ; <அரசன்.)

அழுக்குப் படிப்பித்த நாட்டிய தீமையினால் உணர்வே,
மழுக்கப் படிப்பித்தனால் அலையாது மனது இரங்கிப்,
பழுக்கப் படிப்பித்தன் ஆசையின் அஞ்சி பணிந்து வர,
முழுக்குப் படிப்பித்த நாயகமே! எம் ***முஹம்மதுவே!-2*.**

செப்புவிக்கும் ^இடர் ஏக முறையைச் செயவிலதால்,
அப்புவிக்கும் இடரே கசக்கும் பொழுது அல்வினைகள்,
தப்புவிக்கும் இடரே <கலிமா மொழி தந்தருள்வீர்,
முப்புவிக்கும் -இடர் ஏக வரும்-எம் ***முஹம்மதுவே!-3*.**
(^இடைஞ்சல்,துன்பம் ; <மூல மந்திரம்.)

பிடிக்குஞ் சரமடவார் மனத்தர் பெரும் படையும்,
இடிக்குஞ் சரமடவார் அமர் நீதி இசை படைத்தீர்,
அடிக்குஞ் சரமடவார் அகமாம் ^அறுஷைக் கடக்கும்,
முடிக்குஞ் சரமடவார் அணி ஏத்தும் ***முஹம்மதுவே!-4*.**
(^இறை சிம்மாசனம்.)

முன்னிற்க வந்தனடித் ^துமிழ் மேனி மென் பூமகளாற்,

பொன்னிற்க வந்தன் அடித் துணை நுந்தம் புறத்து அடைந்தேன்,
பின்னிற்க வந்தன் அடித் துதி மன்னர் பெரும்படை உன்,
*முன்னிற்க வந்தன் அடித்துயர் ஏற்கை **முஹம்மதுவே!-5**.*
(^துமித, மழைத்துளி.)

அதிரும் பலனை அகத்தருகாமல் தத்தம் புவியோடு,
எதிரும் பலனை அகத்தரும் பெற்று இமையனியின்,
இதிரும் பலனை அகத்தரும் அச்சாய் ஏந்தி நின்றேன்,
*முதிரும் பலனை அகத்தருள்- ஜோதி **முஹம்மதுவே!-6**.*

சுகத்துக் கவலைக் கணியுறு வேடன் கருவியிட்ட,
அகத்துக் கவலைக்கு அணியடர் மான் நின்று இழிவுற்ற,
மகத்துவக் கவலைக்கு அணியற் துரும்பின் மனத்தில் என்றன்,
*முகத்துக் கவலைக்கு அணியருள் தாரும்- **முஹம்மதுவே!-7**.*

திருக்கதரப் பரமார்க்க உணர்வினர் சிந்தையினில்,
உருக்கதரப் பரமாக உரைக்கும் உயர் அறிவே,
பெருக்கதரப் பரமானந்த நாளும் பெரும் புகழே,
*முருக்கதரப் பரமாதர் துதிக்கும் **முஹம்மதுவே!-8**.*

அரணத்தமரு மரபத்தளமும் அழித்தளிகள்,
கரணத்தமரு மரபத்தகையுங் கணி புயத்திர்,
இரணத்தமரு மரபத்தவமும் இயைவிதத்தாம்,
*உரணத்தமரு தர ^பத்தர் ஏத்தும் **முஹம்மதுவே!-9**.*
(^பக்தர்.)

^தித்திப் பதத்துக்கு அரும் பயலாய்ச் செழுந்தேன் மறைகள்,
சித்திப் பதத்துக்கு அரும் பய நோய் வினை தீர்த்து அழகின்,
<சுத்திப் பதத்துக்கு அரும் பயலாக்கித் தொடர்பு அருள்வீர்,
*>முத்திப் பதத்துக்குக் அரும்பயனான **முஹம்மதுவே!-10**.*
(^தித்திப்பு ; <சங்கு,பவித்திர,பரிசுத்த ; >மோட்ச.)

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

நபியுல்லாஹ் பேரில் முனாஜாத்து

^அலிப் எழுத்து ஒன்று மூன்று ஐந்துமாய் ஏழுமாகி,
அலிபினால் அமைந்த பேரில் அறிவுமாய் <உஜூதுமாகி,
அலிபுக்குள் லாமுமாகி அம்முறைக் >கலிமாவாகி,
அலிபுக்குள் முளைத்த **மீமின் அஹ்மது நபியுல்லாஹ்வே-1**.
(^அரபியின் ஆதி எழுத்து ;<மூலம் ; >மூலமந்திரம்.)

^பஹ்ற் ஒரு நான்கு மூன்றில் பரிவுற இருந்து வல்லோன்,
நிகரறுஞ் சமூகத்துற்று நெடுந்தினம் வணங்க நின்றீர்,
மிகு புகழ்த் தலங்கள் நான்கு மேவி- எவ்வுருவும் பெற்றே,
அகமகிழ்ந்து ஒளிவாய் நின்ற **அஹ்மது நபியுல்லாஹ்வே-2**.
(^மெய்க்கடல்.)

தஃகத்துடன் பகுவமின்றித் தன்னிடங் குறிப்பு ஒன்றின்றி,
அஹதியத்து என்னுழச்சி என்பெரும் வாஹிதிய்யா,
வகை நடுக் குறிப்பின் மேலும் வழியினும் பறுசக்காதி,
முகம் ஒரு மூன்றும் பெற்ற **முஹம்மது நபியுல்லாஹ்வே-3**.

ஃதவாபுடன் பகுவமின்றித் தன்னிடங் குறிப்பு ஒன்றின்றி,
ஹவாவிக்கு ஊன்று மேலும் அப்புற மூன்றினுக்கும்,
பவாவித்த ^மஹ்லூக்கு எல்லாம் பரவிய கருவாய்த் தோன்றி,
<மூவாப்பொருளாகி நிற்கும் **முஹம்மது நபியுல்லாஹ்வே-4**.
(^படைப்பினங்கள் ; <முச்சுடர்.)

<ஜமாலுடன் >ஜலாலும் மோதித் தாக்கிய நடுவிற் தோன்றிக்,
^கமாலியத்துடனே ○தூறாய்க் கலந்து இரு வினையின் பாலாய்,
•அமானிதம் எடுத்து யார்க்கும் அரும்பொருள் அளிக்கும் கோவே,
மூவாம் உரு ஒன்றாய் நின்ற- **முஹம்மது நபியுல்லாஹ்வே-5**.
(<சாந்த ; >ராட்சத ; ^முழுமை,பக்குவ ; •அமானப் பொருள். ; ○பயணித்து.)

^ஹயாத்துடன் ஏழுஞ் சேர்ந்த கணக்கு இருபதிற் றேழாய்,
வியாபிக்கும் அட்சரத்தின் விளங்கிய சட்டையிட்டுத்,
தயாநித்ய முத்த மேவுந் >**தாஸீமே**! <**காஸீமே**! தன்,
-மையாய் நிற்பது என் கொல்? **முஹம்மது நபியுல்லாஹ்வே-6**.
(^வாழ்வு ; >பரிசுத்தப்படுத்துபவர் ; <பகிர்ந்தளிப்பவர்.)

^ஃகைறுடன் <ஷற்றும் நாயன் °கற்பனை >சற்பனைக்குஞ்,
செயல் அறும் பொருளாய் •ஆலந் தெளிதரும் விளக்காய்த் தோன்றும்,
பயிரரும் நபியே! நுந்தம் பாதமே போதங் கொண்டேன்,
○முயங்கல் வேண்டுமையா! ***முஹம்மது நபியுல்லாஹ்வே-7**.*
(^நலவு ; <கெட்ட ; °விதி ; >சதி ; •உலகம் ; ○தழுவல்.)

●தவாத்துடன் <கலமுந் தாங்குந் தவநிலை ^லவ்ஹு மூவார்க்கு,
கவா நிலை □எழுவர் தம்பாற் காட்டும் >பன்னிருவர் அன்னார்,
ஒவா நின்ற இருபத்தெண்மர்களால் நடக்கும் °ஆலம்,
மூவாப்பொருள் இவை -உன் மூல ***முஹம்மது நபியுல்லாஹ்வே-8**.*
(●மைக்கூண்டு ; <எழுத்தாணி ; ^விதிப்பலகை ; □எழு ரிஷிகள் ; >12கௌதுகள் ; °உலகம்.)

^ஃதம்முடன் மதிலத்தோடுந் தன்மையுங் கொண்டு வஞ்சம்,
பம்மிய வடிவே! நுந்தம் பதமலர் கெதியே அல்லால்,
இம்மகிலத்தில் வேறே எவருண்டு? கருணை செய்வார்,
மும்முறை உலகம் போற்றும்- ***முஹம்மது நபியுல்லாஹ்வே-9**.*
(^நிந்தனை.)

^றஹ்மத்துக்குரிய பேரும் <றிசாலத்தும் பொதிந்து நிற்ப,
அகமுற்ற மணியாய் நின்ற ***அஹ்மதாம்*** *>அற்வாஹுக்கும்,*
பகுமற்ற மூன்றினுக்கும் பரவிய பொருளாய் நின்றே,
முகம் மொய்த்த வள்ளலான- ***முஹம்மது நபியுல்லாஹ்வே-10**.*
(^அருள் ; <தூதுத்துவ ; >உயிர்கள்.)

^ஸுஹ்துடன் <றிழாஅத்தாவுந் துலங்கிய >தக்வாயோடுன்,
தகுதியுஞ் °ஸபுறும் •இல்முன் தன்மையுங் கொண்ட கோவே,
•அக்ல் ஒரு நான்கும் பெற்ற ○அவ்வலும் ●ஆகிறாகி,
முக நிலை ஃகாஸீமான ***முஹம்மது நபியுல்லாஹ்வே-11**.*
(^துறவு ; <பொருத்தம் ; >இறையச்சம். ; °பொறுமை ; •அறிவு ; ○ஆரம்ப. ●இறுதி)

^ஸிற்றினிற் பிறந்த நூறுஞ் சிறந்ததொரு நூறுங் ஹேயுந்,
துற்றத்தின் மீமுந் தேயுந் தொக்குறுங் குற்றத்தோடும்,
மற்றத்தின் மற்றத்தாக மற்றெல்லாம் படைத்த மூலம்,

உற்றது ஒன்றில்லா வள்ளல்- **முஹம்மது நபியுல்லாஹ்வே-*12***.
(^இரகசிய.)

<ஷஹாதத்துங் >ஙைபுக்கும் பண்ணுற நடுத் தங்கி ஓங்கி,
□இகாதத்து இரண்டினுக்கும் இறை என உதித்த கோவே,
°நகம் நிலை ஆள என்னை •நவம் பெறக் காலம் பூண்டு,
முகம் வசீகரத்தின் மேவும்- **முஹம்மது நபியுல்லாஹ்வே-*13***.
(<சாட்சி ; >மறைவு ; °பூமி ; •சினேகம் ; □வளைந்து.)

சதபிடம் பிறவா முத்தத் ^தண் கதிர் மறையாத் திங்கள்,
ஃகதமது தோன்றாத் தீபங் கமழ்ந்தலர் மாறாப் பூவே,
*நிதநிதம் <ஃபிக்றினோடு நிலைத்திடும் >***இறஸூல்** *என்ன?,*
முதனிலை புரிந்த வள்ளல்- **முஹம்மது நபியுல்லாஹ்வே-*14***.
(^குளிர்ச்சி ; <கவலை ; >நிறை தூதர்.)

^ளற்றத்தாந் <துனியா என்ப- தலைவியாம் >ஆஃகிறத்தின்,
குற்றத்தால் அவனைத் தேடுங்- கெற்றவர் உடனே சேர்த்துப்,
பற்றற்றில் ஆக்கி என்னைப்- பரிவுடன் காத்தல் வேண்டும்,
முற்றற்று ஒன்றில்லா வள்ளல்- **முஹம்மது நபியுல்லாஹ்வே-*15***.
(^சேதம்,தீங்கு ; <உலகம் ; >மறுமை.)

^தையிபாய் ஆலம் எங்குந் <தஹாரத்தை விளக்குவித்த,
ஐயனே! மெய்யனே! என் அகத்தின் உயிராய் நின்ற,
பொய்யில்லா உண்மைத் தூதே! >புன்மையின் பிணிகள் நீக்கி,
பொய்யணி கிருபை நல்கு- **முஹம்மது நபியுல்லாஹ்வே-*16***.
(^மணம் ; <பரிசுத்தம் ; >ஈனம்,சிறுமை,வறுமை.)

^ளாஹிறாய் <பாத்தினாகி >நவநிதி கொண்டு முன்னம்,
°ஆஃகிறாய் •அவ்வலாஹி அவற்றிற்குச் ○ஸதாகத்தாகி,
ஆகிய ●ஐபுமாகி அறிவுடன் தெளிவுமாகி,
மோகமாம் மயிலுமான- **முஹம்மது நபியுல்லாஹ்வே-*17***.
(^வெளிரங்க ; <அந்தரங்க ; >கற்பநிதி ; °அந்தம் ; •ஆதி ;○நட்பு ; ●காணப்படாத)

^இல்முடன் <ஃகுதுரத்தோடும் >இறாதத்துங் °ஹயாத்து நான்கும்,
நல்மதி பொருந்துங் குன்பான் அளி பெற எழுந்த மூன்றும்,
பன்முறை படைக்குங் கோமான் பண்புறும் இறஸூலாகி,

●முன்-முறை உதித்த கோவே! **முஹம்மது நபியுல்லாஹ்வே-*18***.
(^அறிவு ; <இறை வல்லமை ; >நாட்டம் ; °வாழ்வு ; ●ஆதி.)

^காரினில் இருக்கும் போதிற் கலங்கிய அபூபக்கருக்கு,
<வாரியும் >வங்கத்தோடும் வெள்ளமும் அழைத்துத் தந்து,
நேரியலாக்குங் கோவே! நினைப்புடன் அறிவும் ஈந்த,
மூரியின் அருளும் °வண்மை- **முஹம்மது நபியுல்லாஹ்வே-*19***.
(^இருள் ; <கடல், நீர் ; >ஆறு ; °அழகு, ஈகை, புகழ், மெய்மை.)

பகுமுடன் ^வஹ்முந் துன்னும் பன்னிலை <ஃகியாலுஞ் சூழ்ந்து,
மிகும் >அக்ல் ஐந்து போதம் வேண்டிய அருளும் ஈந்து,
தொகு நுந்தம் புகழே பாடத் துணை செய்வீர் இணையில்லாத,
முஹம்மதே! முஸ்தபாவே! **முஹம்மது நபியுல்லாஹ்வே-*20***.
(^மாயை ; <நினைப்பு ; >அறிவு.)

^ஃகாயிமாய் நினைத்த வல்லோன் <ககனரும் மற்றுமுள்ள,
மேயதோர் செந்துஞ் சொல்லு மேன்மையின் ஸலவாத்தாகில்,
நாயினுங் கடையேன்- உங்கள் >நவநீதங் காணறகாமோ?,
மாயிலா குண பண்புள்ள **முஹம்மது நபியுல்லாஹ்வே-*21***.
(^நிலைத்த ; <வானோர் ; >புதுமை.)

^காஃபுடன் ஹேயும் யேயும் அய்னுடன் ஸாதுமாகிக்,
<காஃபுடன் ஃபேயுமாக்கிக் காமுதல் ஐந்துமாகிக்,
காஃபுடன் நூனுமாகிக் கலந்திடும் வாவுமாகி,
மூ புவனங்களான **முஹம்மது நபியுல்லாஹ்வே-*22***.
(^كهيعص ; <كف)

^லவ்லாக்க <ஆலமெல்லாம்- நான் படையேன் என்று ஓதும்,
>அவுலா நீர் ஆகையாலும் -°அர்வாஹுக்கு நீராலே,
கவுலானதுள்ளம் நோக்கி கட்கடை என்பான் -நோக்கும்,
•மவுலா அலா ○முறாதி- **முஹம்மது நபியுல்லாஹ்வே-*23***.
(^நீர் இல்லையெனின் ; <உலகெல்லாம் ; >ஆதி ; °உயிர்கள் ; •தலைவன். ○நாட்டம்.)

^மாலிக்காய் நின்ற வல்லோன் மணிமுத்தாய் விளங்கி நன்மை,
<ஃகாலிக்கானவர்கள் காணுங் காட்சியாய்த் தவங்கள் செய்யுங்,

கூலிக்கு ஆதரவு உள்ளோனைக் கொண்டு உய்ய வேண்டுமையா,
>மூலக் காரணமாய் நின்ற- **முஹம்மது நபியுல்லாஹ்வே-24**.
(^அரசன் ; <படைப்பினங்கள் ; >முதல்.)

<நூறினிற் பிறந்த கோவே! நும் பதம் நம்பும் >பையல்,
^நூறிரண்டு ஐம்பான் ஆறாம் நோக்கிய >இஸ்மின் உள்ளே,
வேறிரண்டு இல்லா வண்ணம் மேவிடச் செய்ய வேண்டும்,
மாறிலையாகி நின்ற- **முஹம்மது நபியுல்லாஹ்வே-25**.
(<இறையொளி ,^256அப்ஜத் இலக்க இறைநாமம் "**நூர்**" ; >சிறுவன் ; >பெயர்.)

^வதூத் எனும் இறையோன் பையில் வருமொழி தானாய் நின்றே,
<ஹதீதுகள் பலவும் போற்றுங் >காத்திமுல் °அன்பியாவே!,
ஹதீதுள்ள ஆலங் காக்குஞ் ○ஸையிதே! எளியேன் பாலின்,
●மதா இது புரியுமையா- **முஹம்மது நபியுல்லாஹ்வே-26**.
(^நட்பாளன்; நபிமொழிகள் ; >இறுதி ; °தீர்க்கதரிசிகள் ; ○தலைவர் ; ●ஆதரவு.)

<ஹாதியாய் ^முஹைமினாக்கிக் ஃகாலிக்காய் >றாஸிக்காகி,
ஆதியாய் நின்ற வல்லோன் அருளிய இரு துறைக்கும்,
நீதியாய் நின்ற கோவே! நெறியிலான்(என்) தனக்கு வெற்றி,
மூதுரை அளிக்க வேண்டும்- **முஹம்மது நபியுல்லாஹ்வே-27**.
(<நேரிய வழியில் ; ^அரவணைத்து ; >உணவளிப்போன்.)

யாதுடன் நினைவும் பூண்டு யாவர்க்கும் முதலாய் நின்ற,
வேதியர் மூவருக்கும் விளக்கென விளங்கி எங்கும்,
போதகம் பெருமையான புன்மயன்(என்) துன்பமெல்லாம்,
மோதிடாது அகற்ற வேண்டும்- **முஹம்மது நபியுல்லாஹ்வே-28**.

இருவகை எழுத்தும் ^மீமின் இனமுமாங் கவிதை சொல்லுந்,
திருவகை அருள் <ஹபீபு முஹம்மதின் சிறந்த மைந்தன்,
கருவகை உணர் **ஷெய்கு அப்துல் காதிற்** என்றுணக்கும் பேரான,
மருவகை கொள்ளுமையா- **முஹம்மது நபியுல்லாஹ்வே-29**.
(^**முஹம்மது முஹ்யித்தீன்** ; <நேசர்)

நபியுல்லாஹ் பேரில் இன்னிசை

பூவுலகு வாசம் பொருந்திய போல் எவ்வுயிர்க்கும்,
பாவுலவும் ஆதி பராபரன் முன் நன்மணியாய்,
மேவுலவி யெல்லாம் மிகவாக வந்துதித்த,
^மூவுலகுங் காக்கும் **முஹம்மதுற் றஸூல் நபியே-1**.
(^பூமி அந்தரம் சுவனம்.)

நித்தமன வஞ்சகமும் நெறி மேடுந் தீவினையும்,
பத்தியுடன் பூண்ட சிறு பையன் முகம் பார்த்தருள்வீர்,
கத்தன் அருளால் அடியார் கவலை அறக் காத்தளிக்கும்,
முத்தி உயர் ^மக்கா **முஹம்மதுற் றஸூல் நபியே-2**.
(^மாநபி பிறந்த ஊர்.)

என் போலப் பாவியர்கள் எத்தனை பேரானாலும்,
உன் போற் கிருபையுள்ளார்- ஒருவரையுங் காணேனே?,
பொன் போல் <அரு-மணி போற் பூங்கனி போல் யாவருக்கும்,
முன்போல் உதித்த **முஹம்மதுற் றஸூல் நபியே-3**.
(<இறை,அறிவு,அணு.)

வாதாடுங் கள்ள மன ^வஞ்சியர்கள் <கஞ்ச முகம்,
மீதாடும் ஆசை வினை மேலாடல் எவ்விதமோ?,
°கோதாடு புன் >காஃபிர் கொண்ட •நிலைப் புண்டு விழ,
மூதாடும் இன்சொன் **முஹம்மதுற் றஸூல் நபியே-4**.
(^பெண்கள் ; <வஞ்சக ; °நிந்தை ; >இறை மறுப்பாளர் ; •உறுதி.)

ஊரார் மனம் நோவ- உற்றார் மனம் நோவப்,
பேரார் மனம் நோவப்- பேதகத்தார் போதாரோ,
சீரார் மறை நாவின் செங்கனியால் இவ்வுலகம்,
ஊரார் புகழின் மக்கா **முஹம்மதுற் றஸூல் நபியே-5**.

^வன்ன மதியார் செய்வினையால் வண்ண மயிலதாக மிகப்,
புன்மதியால் எண்ணியெண்ணி பொங்கி உளம் வாடுவனோ?,
நன்மதியே! பூம்பாதம் நாடி வந்து <தாழ்ச்சி செய்யும்,
முன்மதியே! பேரருளே! **முஹம்மதுற் றஸூல் நபியே -6**.
(^சித்திரிப்பு ; <தாழ்மை)

இழிக்காளர் வஞ்ச நெறிக்கு எட்டாமல் வந்ததொரு,
வழக்காளர் மாண்ட மண ^வாடை கொண்டு சூடாரே,
மழைக்கால் <அஸ்ஹாபி வாய்ந்த வன மட்டாக,
முழுக் காரணங் காட்டும் **முஹம்மதுற் றஸூல் நபியே-7**.
(^வாசனை ;<நபித் தோழர்கள்.)

வேதநெறி ஆதியுரை வித்தாக முத்தி நிலை,
பேதநெறி என்ற வொன்னார்- பேரலைந்து பாராரோ?,
<காத நெறி வீசும் உயர் கஸ்தூரி மேனி உங்கள்,
மூதறிவு நல்கும் **முஹம்மதுற் றஸூல் நபியே-8**.
(>துறவு.)

திக்கலருங் கீர்த்தி மதி செல்வமுடன் பெற்றாலும்,
^ஹக்கன் அருள் பெற்ற- <மருள் பெறுதல் எவ்விதமோ?,
மக்க நகர் வந்து >மதீன நகர் நல்லரசு,
முக்கியமாய் நின்ற எங்கள் **முஹம்மதுற் றஸூல் நபியே-9**.
(^மெய்யன் ; <மயக்கம் ; >நபி மறைந்த ஊர்.)

மறையோர் நெறியோர் வழியோர் மொழிக்கு இழிவே,
குறையோர் குறைநோய்கள் கொண்டு அலைவது எந்நாளோ?,
நிறையோர் சபையில் உமை நிந்தை செய்தோன் -அவர் காணும்,
முறையோதும் எங்கள் **முஹம்மதுற் றஸூல் நபியே-10**.

தீங்குடைய வஞ்சகர் தம் செய்கையினால் உள்ளயர்ந்து,
பாங்குடனே என்னாளும் பரிதவிப்பது எவ்விதமோ?,
தேங் கமழுங் குங்குமப்பூஞ் செழும் புயர்த்தீர் வாய் வழங்கா,
>மூங்கன் உய்யக் காத்தருள்- **முஹம்மதுற் றஸூல் நபியே-11**.
(>ஊமையர்)

பொறற்காட்டு நற்மேனிப் புன்காவி தந்த நகை,
வறற்காட்டிக் கண் காட்டும் வஞ்சியர்க் கை ஆவேனோ?,
விற் காட்டும் வெள்ளி முடி மேற்காட்டி ^ஜிபுரீலுக்கு,
°முற்காட்டும் மூப்புடைய **முஹம்மதுற் றஸூல் நபியே-12**.
(^விண்ணவர் கோன் ; °தான் **அநாதி** என்பதைக் காட்டிய நிகழ்வு)

பொய்யுரையுஞ் சூதும் பொல்லாங்கு நிந்தனையுங்,
^கையிறை கோளுந் துணியர்க்கு கையுரையில் ஆவேனோ?,

பையுர ரகம் பேசிப் பணிந்தழகு பெற்று வர,
மெய்யுரை கொடுத்தாளும் ***முஹம்மதுற் றஸூல் நபியே-13****.*
(^கைரேகை.)

^சழக்குடைய மேன்மை கொண்டு சார்பு பற்றிப் பொய் கொண்டு,
வழக்குரைக்கும் ஒன்னார் மதிக்கு ஏற்பது எவ்வினையோ?,
உழக்கரை கொண் மாவதனால் ஓராயிரர்க்கும் நா,
முழக்குவித்த காரணத்தின் ***முஹம்மதுற் றஸூல் நபியே-14****.*
(^அறியாமை,பொய்.)

^வேட்டம் உற மேவும் விபரமுடன் கொஞ்சி நயங்,
காட்டும் அமுத வாய் >மடவார் கண்வலைப் பட்டு ஏங்குவனோ?,
காட்டகத்தின் வேடன் மதி காணப் புலி நேர்வழியே,
மூட்ட -அருள் மூட்டுவித்த ***முஹம்மதுற் றஸூல் நபியே-15****.*
(^வேட்டை ; >மடப் பெண்டிர்.)

புன்னெஞ்சி இரக்கமில்லாப் பொய்யுரையார் பாற் சென்றன்,
நன்னெஞ்சின் ஆவலெல்லாம் நச்சியிடல் எவ்விதமோ?,
கன்னெஞ்சு கொண்டோரைக் கைதாங்கும் வள்ளலுக்கு,
முன்னெஞ்சுரைத்து அழைக்கும்- ***முஹம்மதுற் றஸூல் நபியே-16****.*

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

முஹ்யித்தீன் ஆண்டகை பேரில் முனாஜாத்து

^அஹதியத்தில் இருந்த ஜோதி! அடங்கில்லா உஹதத்தாகி,
மிகு புகழ் வாஹிதிய்யாய் விளங்கிய ஒளிவாய் நின்ற,
*நகைவளா <****ஹக்கன்*** *பால் >அலங் கொளும் பொருளே! எற்றாக்,*
*°ககனமும் புவியும் போற்றுங் ○****கௌது யா முஹ்யித்தீனே-1****.*
(^அதிகம் ; <மெய்யன் ; >இரக்கம் ; °ஆகாயம் ; ○இரட்சகர்)

>பாத்தினாய் >ளாகிறாகி பார்வையுங் கேள்வியாகி,
ஏத்ததோர் வாசமாகி எடுத்ததோர் இன்பமாகித்,
தோத்திரஞ் செய்யக் கூடாச் ^சொரூபமாய் அமர்ந்த சோதி,
கார்த்ததோர் வடிவாய் வந்த ***கௌது யா முஹ்யித்தீனே-2****.*
(<மறைவான ; >வெளிரங்கமான ; ^வடிவம்.)

●தபாவத்து ஒன்றில்லா நாயன் தனது இன்பம் மேவி வாழும்,
நபகுள்ள ^தாறுல்-குல்தில் நன்மணித் தொட்டின் மீதில்,
<ஸப்றுடன் துயில் செய் கோவே! >தாக்கத்து இல்லாத வேளை,
°ஃகபிலத்தை அகற்றும் ஐயா- **கௌது யா முஹ்யித்தீனே-3**.
(●இருப்பிடம் ; ^அழியா வீடு ;<பொறுமை ; >வலிமை ; °தளை,கவனமின்மை.)

<தானியாய் ^ஃதாலிதாகிச் சாற்றவும் அடங்கனாகி,
மோனியாய் >நாத்திக்காகி முடமுடன் அகமோடு அங்க,
மேனியாய் °ஜிஸ்மாம் முன்னம் •மிதாலுமாய் நின்ற என்றன்,
●கியானியாய் இலங்கும் வாழ்வே! **கௌது யா முஹ்யித்தீனே-4**.
(<இருப்பிடம் ; ^மூன்று ; >நம்பிக்கை ; °உடம்பு ; •உதாரணமாய் ;●இருப்பு)

<ஜாயிஸூம் >வாஜிபோடு ^முஷ்தகீலான கோலம்,
ஜாயிஸு முஷ்தகீலுஞ் ஜாயிஸாய் வாஜிபாகும்,
°ஃபாயிஸூம் என்று சொல்லப் பசுவுடன் அறிவனாகக்,
•ஃகாயிசை அகற்றுமையா- **கௌது யா முஹ்யித்தீனே-5**.
(<ஆகுமான ; >கடமையான ; ^வழித்தோன்றல் ; °துணை ; •அவமானம்.)

^ஹாஃபிளாய் இருப்பதென்னோ? •காமிலாய் இருப்பதென்னோ?,
<ஜாமிஆய் இருப்பதென்னோ? >ஸாரிமாய் இருப்பதென்னோ?,
°நாமியாய் இருப்பதென்னோ? நானிலம் முழுவதுந் தாங்கள்,
○காமிராய் இருப்பதாலே- **கௌது யா முஹ்யித்தீனே-6**.
(^காப்போன் ; •**சற்குரு** ; <இணைந்து ; >வசீகரம் ; °வளர்ச்சி ; ○**அநாதி**)

^ஃகாதிமாய் நாளுந் தங்கள் <கதம் என்றன் தலை மேல் வைத்து,
>நாதிமாய் இருப்பதென்னோ? நாடின பேர்கள் உள்ளம்,
யாதுமாய் °இறாதுமாகி- எங்கும் ஒரு பொருளாய் நாளுங்,
ஃகாதிமாய் நின்ற கோவே- **கௌது யா முஹ்யித்தீனே-7**.
(^பணியாள் ; <பதம் ; >நேட்டம் ; °நாட்டம்.)

<தாயிமாய் >ஹம்து சொல்லுந் தகுதியும் உடையனாகில்,
வாயுமாய் வயிறுமாய் மேல் வழிவிடு நாவுமாகிப்,
பாயுமாய் இன்பந் துய்க்கும்- பரிசுமாய் நிறைந்த கோவே,
^காயிமாய் ஆளுமையா- **கௌது யா முஹ்யித்தீனே-8**.
(<நிரந்தர ; >இறை புகழ் ; ^நிலையாய்)

<தாத்தினில் >ஸிஃபாத்துமாகித் தகைமையும் உடையனாகில்,
ஏற்றதோர் ^இறாதுஞ் சேர்ந்த °அக்வாலும் •அஃப்ஆலும் போல்,
பாத்துறு உடம்புங் கூடிப் பல்வினைக்கு ஆளாகாமற்,
காத்தருள் புரிய வேண்டும் **கௌது யா முஹ்யித்தீனே-9**.
(<மூலம் ; >பண்பு ; ^நாட்டம் ;°குணம் ; •செய்கை)

<றத்து இல்லா- மீட்சியில்லா >**றப்பு** எனும் பெரும் பேரில்லால்,
ஒத்தனும் இறையோன் யார்க்குங் ^கத்தனாம் எனும் ஓர்க்கத்த,
மத்தலால் வேறுமுண்டோ? மானிடர் துன்பத்திற்குக்,
கத்தனாய் இருப்பதென்னோ? **கௌது யா முஹ்யித்தீனே-10**.
(<தடை ; >ரட்சகன் ; ^சிவன்)

^சாஹிதா வினையின் நாளுந் தயங்கியே நெறி நில்லாமல்,
<பாயிதாக் காணாததாலோ? பழையது என்ற எண்ணத்தாலோ?,
நோயில்லா வாழும் வாழ்க்கை >நுண்மையாம் ஐயா! மெய்யா,
-காயிலாக் கிருபை செய்யுங்- **கௌது யா முஹ்யித்தீனே-11**.
(^சேர்மானமில்லா ; <பலன் ; >நுட்பம்,நேர்த்தி)

^ஸறாயிலும் வெளியும் ஒன்றாய்த் தாங்கிய **பெரியோன்** உள்ளந்,
<தறாயிறாய்த் திரண்ட சோதி தங்கரிப்பு ஆனதாலே,
மறாயிறான் அதையொரு °செய்கு- >மனாமதில் ஆக்குவித்த,
•கறாயிறில் கறாயிறே நீர்- **கௌது யா முஹ்யித்தீனே-12**.
(^இரகசிய ; <துண்டு ; °குரு ; >கனவில் ; •எளிமை.)

^ஷாஹிதுக்கான பேர்கள் சாட்சியாம் அல்லால் வேறும்,
ஆகுவாறு உண்டோ? வாயால் அறைகுவார் <கலிமாப் போலாம்,
வாகுடன் அடிமை(யான்) நோகுதல்- வழியிடஞ் சேரச் செய்யுங்,
●**காஹிறே**! ○**காதிரிய்யே**! **கௌது யா முஹ்யித்தீனே-13**.
(^சாட்சி ; <மூல மந்திரம் ; ●அடக்கி ஆள்பவன் ; ○வல்லான்.)

^ஸிஃபாத்தொரு ஏழுஞ் சேரா- ஸிஃபாத்தொரு ஏழும் ஏழாய்,
○காபாத்தறா <மர்த்தபாவுங் கலந்தொரு தோற்றம் ஏழும்,
ஒஃபா றஹ்மான் தன் ஆணை- உடையவே சேரா துன்பக்,
>கபாடத்தை அகற்றும் ஐயா- **கௌது யா முஹ்யித்தீனே-14**.
(^பண்புகள் ; <பதவி ; ○ரட்சிக்கும் ; >கதவு.)

^ஸிறாறினால் மனங்கள் நொந்து நினைத்துளம் உருகிக் கண்ணாற்,
<ஸிறாறொடு மருவி பாய- °ஜிஸ்மு இல்லான் துயரம் என்னும்,
முறாதுள இன்பம் துன்பம் முடுகுதல் தகுமோ? என்னுள்,
கறானுடல் மருவுங் கோவே- ***கௌது யா முஹ்யித்தீனே-15***.
(^தீங்கு ; <ரகசிய, இறுதி ; °உடல்.)

^தாகிறாகிய தொரு மாது தனதொரு மைந்தன் செத்துப்,
போகவே அழுத வேளை- புகழுடன் எழுப்பி ஈந்த,
<போக வாழ்வுடைய கோவே! **புண்ணியப் பொருளே!** என்றன்,
காகநோய் போக்கும் ஐயா- ***கௌது யா முஹ்யித்தீனே-16***.
(^பத்தினி ; <மருவு)

^ஜுல்மிலே நடந்து நித்தஞ் சொல்லொணாப் பாவந் தேடி,
<இல்மிலே இணங்காதனரை - எடுத்ததொரு பிணியால் வாடி,
நன் °முனாஜாத்துஞ் செய்ய நலந் தெரியாத பாவிக்கு,
•கன்மநோய் போக்கும் ஐயா- ***கௌது யா முஹ்யித்தீனே-17***.
(^பாவம் ; <கல்வி ; °வேண்டுதல். ; •தீரா ரோகம்.)

^ஆரிஃபீனான பேர்கள் அடங்கலுந் துதிக்கத்தக்க,
நேர்மையே கொண்ட பாதம்- நினைக்கு முன் ஜனன பாவந்,
தீருமே தங்கள் <காதிம் செயலகு **வாலை** பார்க்கக்,
காருமே கடைக்கண் பாருங்- ***கௌது யா முஹ்யித்தீனே-18***.
(^ஞானவான்கள் ; <பணியாள்.)

^நாயிதுக்கு இருக்க எண்ணுங் கருத்துள்ள <ஷெய்கைக் கூவி,
வாயுரை கேட்பதாக >மருங்கினில் விடுத்த துன்பத்,
தீவினை அகற்றி விட்ட தேவரீர்! திருப்பேர் ஆணை,
காமப்பிணி போக்கும் ஐயா- ***கௌது யா முஹ்யித்தீனே-19***.
(^தலைமை ; <குரு ; >ஒழுங்கு.)

பகுமில்லாதொரு ஜின் கொண்டு போனதொரு ^பாவை தன்னை,
அகமியப் பொருளைச் சொல்லி >அவடிக்கு அறிவித்து இன்ப,
மிகையுடன் தேவை கொண்டு ^மெல்லியர் கிடக்கச் செய்த,
கௌதே சரணம் ஐயா! ***கௌது யா முஹ்யித்தீனே-20***.
(^பெண் ; >குழாம்)

^ஃகுற்றத்து-ஐனியாய்க் குவலயத்து உதித்த வள்ளல்,
<துற்றத்துல் ஃபைழாவானோர்- பேர் வழித் தோற்றம் அல்பம்,
அற்றத்து நாமஞ் சொல்லி வருமோர் உதவி என்றீர்.
கற்றதொன்று இல்லாத கோவே! **கௌது யா முஹ்யித்தீனே-21**.
(^கண் குளிர்ச்சி ; <சுவன வெள்ளைச் சோலை.)

[1]**ஹபீபும் நீரே**! [2]ஜிஸ்மும் நீரே! [3]**ஐனும் நீரே**! [4]**ஃகல்பும் நீரே**!,
[5]ஸுப்ஹும் நீரே! [6]மிதாலும் நீரே! [12]கன்ஸும் நீரே! [7]ஃகர்ளும் நீரே!,
[8]அப்தும் நீரே! அசலும் நீரே! [9]ஆலிம் நீரே! [10]இல்மும் நீரே!,
[11]ஹப்றும் நீரான கோவே! **கௌது யா முஹ்யித்தீனே-22**.
([1]-[4]நேசர்,உடல்,கண்,இதயம் ; [5]-[8]வேதம்,மூலம்,ஆதரவு,அடிமை ;
[9]-[12]அறிஞர்,அறிவு,மை,புதையல்)

லாயிலாஹாவை நீக்கி நாட்டம் "**இல்லல்லாஹ்**" தன்னில்,
கூவி இறாதத்திற் பூட்டிக் கூட்டித் தம் ^பனிரண்டின்,
மா(ய்கை)யில்லாதத்தை சேர்த்தி மன்னிய <கல்பில் ஊன்றி,
காயில்லாது இருக்கச் செய்யுங்- **கௌது யா முஹ்யித்தீனே-23**.
(^கலிமா எழுத்துக்கள் ; ^இதயம்.)

மீமதே முஹம்மதாகி -முஹம்மதே அஹ்மதாகி,
மீமில்லாது ^அஹதுமாகி மேவும் மூன்று எழுத்தின் நின்றும்,
ஆமெனுந் தொனியுஞ் சொன்ன அலிபிலா நுக்கத்துந் தானாய்,
<ஹாமிதும் >ஹம்தும் நீரே! **கௌது யா முஹ்யித்தீனே-24**.
(^ا ح (م) د ; <புகழப்படுபவர் ; >புகழ்.)

நூறினின் ^ஆறும்-நாறில் நுண்ணிய புனலும் நீரிற்,
கூறிய மணலும் மண்ணிற் குறித்தெழும் [1]ஆதமாகித்,
தேறிய <இஷ்கே [2]ஹவ்வாத் தியங்கிய ஒடுக்க மக்கள்,
காறிய எதிலும் நாளுங்- **கௌது யா முஹ்யித்தீனே-25**.
(^24மூல மந்திர எழுத்துக்கள் ; <சினேகம் ; [1]ஆதாம் ; [2]ஏவாள்)

"**வைல்**" எனும் நரக துன்பம் உயரதன் இன்பமாக,
மயமுறும் இருளும் வெள்ளி மருவின வினையும் பற்றி,
நயமுற வேட்கை வைத்தால் நாடிய நபசு சிக்கிக்,
>கயம் முழுதுமாகக் காருங்- **கௌது யா முஹ்யித்தீனே-26**.

(>அகழி)

*"**ஹூ**"வதே ^ஃஃகையுமாகி- **ஹூ**வதே <"**ஹா**"விலாகி,*
***ஹூ**வதே >காஹிறாகி- **ஹூ**வதே °ஹமீதுமாகி,*
***ஹூ**வதே •பஸீறுமாகி -**ஹூ** முத்துக் கலிமாவாகி,*
***ஹூ** முரீதானே கோவே!* **கௌது யா முஹ்யித்தீனே**-*27*.
(^நிலையானவன் ; <ஹூவின் பெண் தன்மை ; >அடக்கி ஆள்பவன் ;
°புகழ்,முஹம்மத் ; •பார்வை)

"யே"யதே மூலமாக எடுத்ததோர் ^றூகு மேவுங்,
<காயமாம் இதனைக் காணக் கருத்துடன் அறிவு நல்கி,
>மேய தோல் தீங்குறாது மீறிய கிருபை நல்கிக்,
°காயிமாய் ஆளுமையா! **கௌது யா முஹ்யித்தீனே**-*28*.
(^மூச்சு ; <உடல் ; >மூடிய ; °நிரந்தர)

வான் வளர் வெள்ளியென்ன? வரிசையின் இருபத்தேழாய்த்,
தான் வரும் எழுத்தும் பற்றித் தகுதியின் பாடல் செய்தான்,
கோன் அருள் அப்துல்காதிர் தொண்டன் ^மென் ஹபீபு லெப்பை,
*தேனிலும் **இனிய பிள்ளை ஷெய்கப்துல்காதிர்** அன்றே-29.*
(^மெல்லியன்.)

■■■■■■■■■■■■■■■■■■■■■■■■

முஹ்யித்தீன் ஆண்டகை பேரில் இன்னிசை

*ஆதியருள் ஓங்கும் **அண்ணல் நபி** பேரரெனப்,*
^பூதலங்கள் எல்லாம் புகழ வரும் புண்ணியமே,
*மாதவங்கள் செய்யும் மகத்துவர்கள் **கண்மணியாய்க்**,*
>காதம் அகல வந்துதித்த **கௌது முஹ்யித்தீனே**-*1*.
(^பூமி ; >பாவங்கள்)

உள்ளம் மிகக் கலங்கி உண்ணாது உணர்வு அழிந்து,
தள்ளுந் துயர் அரும்பத் தாங்காது உழல்வதுவோ?,
கொள்ளை கொள்ளும் வெம்பூதக் கொடுமையொடு வஞ்சகமும்,
^கள்ளம் எல்லாம் போக்குங் **கௌது முஹ்யித்தீனே**-*2*.
(^கபடம்,குற்றம்.)

ஊக்கம் மிகத் தளர்ந்தே -ஓயாது பாழுங் கவலை,
ஏக்கமது கொண்டு- அடியார் ஏங்கித் தயங்குவரோ?,
தேக்கும் உயர் மெஞ்ஞானச் செழுஞ் சுடராய் இவ்வுலகைக்,
காக்குதற்கு வந்துதித்த **கௌது முஹ்யித்தீனே-*3***.

நெஞ்சம் மிகக் கலங்கி நினைவழிந்து நும்மடியார்,
^தஞ்சம் ஒன்றுங் காணரிதாய்த் <தவக்கங் கொண்டு நிற்பாரோ?,
மஞ்சு தவழ் **பூஞ்சோலை பகுதாது நாயகமே**,
*கஞ்ச மலர்த் தாரும் -***கௌது முஹ்யித்தீனே-*4***.
(^அடைக்கலம்,துணை ; <விருப்பம்,தாகம்.)

சிந்தித்துஞ் சிந்தை செயலழிந்து நும் பாதம்,
^வந்தித்தும் உள்ளம் மருகிக் கலங்குவதோ?,
சந்தித்துத் திண்டோட்டார் **அதிபரே** *நன்மையெல்லாங்,*
>கந்தித்த நாயகமே! **கௌது முஹ்யித்தீனே-*5***.
(^வணங்கி,புகழ்ந்து ; >மணக்கும்)

வெம்பித்த ^வஞ்சியரின் வெங்கடியால் உள்ளமெல்லாஞ்,
<சம்பித் தவத்தங் கொண்டு தத்தளித்து வாடுவதோ?,
*>தம்பத்தின் வந்துதித்த °***தாபரமே***! பன்மையெல்லாம்,*
•சம்பித்து நின்ற -எங்கள் **கௌது முஹ்யித்தீனே-*6***.
(^பெண்டிர் ; <போராடி ; >பற்றுக்கோடு,கவசம் ; °ஆதாரம்,தஞ்சம்,துணை ; •அழைத்தல்.)

^வாட்டம் பட மனமும்- <வண்மை பட உள்ளமெல்லாம்,
>சோட்டம் பட- அடியார் கொண்ட துயர் ஆற்றுவரோ?,
நாட்டப்பட மகிழ்ச்சி நல்லுடலே வளம் பெறவே,
காட்டும் பதி நிதியே! **கௌது முஹ்யித்தீனே-*7***.
(^சோர்வு,மெலிவு ; <மெய்மை ; >சந்தோஷம்)

நீராறு ஒலித்தோட நெஞ்சகத்துங் கண்ணிடத்துங்,
^கோராற்றினால் எளியோர் கொள்ளுந் துயர் போக்கும் ஐயா,
*பாராருங் கீர்த்திப் பதி >***ஜெயிலானி மன்னவரே**,
காராரு நன் கருணை- **கௌது முஹ்யித்தீனே-*8***.
(^சிவன் ; >ஆண்டகை பிறந்த ஊர்)

மைந்தரோடும் எந்தை அரும் மக்களொடு சுற்றங்களுந்,

தந்த மனமே வெறுக்குந் ^தற்காலம் போக்கும் ஐயா,
சிந்தை வளர் ஆனந்த ஜெயிலானி நன்நகராம்,
>கந்த மலர் தாள் அருளுங்- **கௌது முஹ்யித்தீனே**-*9*.
(^தற்சமயம் ; >சந்தன,வாசனை.)

^கோப்புடைய வெங்கடியின் <கோட்டி அணுவும் அணுகா,
நீர்ப்புடையார் இம்மையல்லான் நீள் நிலத்தில் வேறிலையே,
ஏப்புடைய பூதமெல்லாம் எப்புறத்தும் நாடாது,
காப்புடைய வல்லவரே- **கௌது முஹ்யித்தீனே**-*10*.
(^உல்லாசம்,அகங்காரம் ; <நிந்தை,துன்பம்)

ஓராயிரத்தில் உங்கள் உயர் நாமமே உரைத்தார்,
தீராத வன்மையெல்லாந் தீர்ந்து முன்னம் எய்தும் என்று,
ஆராரு அமிர்த மொழி அப்படியாம் இப்படியென்,
காரார் தவப்பேறே- **கௌது முஹ்யித்தீனே**-*11*.

卐卐卐卐卐卐卐卐卐卐卐卐卐卐

முஹியித்தீன் ஆண்டகை பேரில் ஆசிரிய விருத்தம்

சீருலவு கருணையால் எவ்வுலகும் எந்தெந்த ஜீவஜந்தும் புகழவே,
செய்து தந்நிலையோடு அறம் காக்கும் முறை வாழி! தேடரிய மெய்மை வாழி!,
பாருலவும் மன்பதைகள் மற்றவைகள் நேசர் வாழி! பயின்று நற்கதி பெருகுவான்,
பண்ணரிய மறை கொண்டு தூதாகி வந்த நம் ^பார்த்திபர் முஹம்மது <இறஸூல்-**1**.
(^அரசர் ; <மேம்பட்ட தீர்க்கதரிசி)

பேருலவு தவமென்ன? வருகின்ற பெண்பிள்ளை பெற்ற பிள்ளைப் பேராய்ப்,
பேதகத்து உழல்கின்ற சிறியோர்கள் உறுதி நிதி பேறென வருங் ^குரிஸிலே,
மூரியந் தவ மன்னர் வாழும் நகர் பகுதாதின் *முச்சுடர் நின்றிலங்கும்,
முஹ்யித்தீன் முஹ்யித்தீன் என்றவரும் - ஏத்த வரும் **முஹ்யித்தீன் முஹ்யித்தீனே**-**2**.
(^இறை பீடம் ;*அல்லாஹ் றஸூல் முஹ்யித்தீன்.)

நன்னெறி பிழைத்து மற்று ^தெந்-நெறியினுஞ் சிந்தை நனி கொண்டு
வண்மையதனால்,

நானிலத்துறு பந்தமே நனைத்தவையென்ன? நகை பூண்டு திரியும் எளியோர், புன்னெறியினைப் போக்கி அறிவால் எடுத்து வளர் புகழ் நெறியிலாக்கும் அரசே, புண்ணியத்துறை இடையின் நண்ணி நடனத்தை புனைந்து விளையாடும் ஒலியே ***-3***.

(^கருமை.)

செந் நெறியினுக்கு உவமையாத வன்மைத்ததொரு தொல்லை விதிகைக் கனவெனத்,
தோற்றுவித்து அறியாத காரணம் விளைத்த மெய்ச்சோதியே! ஆதி குருவே!,
முன்னெறி விளக்கும் முழு மதிமயமே! பகுதாதின் முழுமணியின் ஓங்கும் நிதியே,
முஹ்யித்தீன் முஹ்யித்தீன் *என்றவரும் -ஏத்தவரும்* ***முஹ்யித்தீன் முஹ்யித்தீனே-4***.

கண்ட பல வினை உறுதியாம் நடைகள் கனியாது கருதாது முயலும் மனமும்,
கபடமொடு வஞ்சகமும் நிந்தை அவஞானமுங் கனியாது கனிய உணர்வுந்,
தண்டனையிலாத மத கரியென்ன? வெட்டவெளிதனிலே ஏறும் அகவீரமுந்,
*தகையுடைய முதியவர்கள் தம்மோடு எதிர்க்கும் ஒரு சண்டாள வன்குணமுமே-****5***.

கொண்டவன் கடைகெட்ட பாவி யான்- துயரினொரு கொடுமைக்குள் நின்று உழல்பவன்,
கொண்டாடி நும்பாதம் ^கெதியாக வந்தனன் -குளிர் அன்பு தந்தருள்குவீர்,
முண்டக மலர்த்தடஞ் சூழும் உயர் பகுதாது முதுநகர் தரித்த ஒலியே,
முஹ்யித்தீன் முஹ்யித்தீன் *என்றவரும் -ஏத்தவரும்* ***முஹ்யித்தீன் முஹ்யித்தீனே-6***.
(^கதி)

பாதகத் தொடரில் நான்- மரியாதை இன்மையாற் பல ^போகமுந் துய்த்தலாற்,
பவகாரி என்பதால் அவகேடு நிலையினாற் பலன் உறுதி ஒன்றுமிலவாற்,
ரோதகப் புன்மை யான்- மடமாதர் உறவினாற் சுருதி முறைகள் பேணல் இலதாற்,
சோர்வு தரும் பிணிகளால் நீர் விழித்ததுவும் பலனற்று- அரவு எனுமொரு பாவி யான்-7.
(^இன்பம்,கலவி)

^மீது அகத்து அருளினால் அன்பினால் ஆளும்- <நவ மிக்குடைய குருநாதரே!,
மேன்மை தரும் நும் பாதம் உபயமே -அபயம் இனி வேறில்லை வந்தடைந்தேன்,
>மோதகத் தொனியினால் வெகு நோய்கள் தீர்த்தவா! முதிய பகுதாதின் அரசே,
முஹ்யித்தீன் முஹ்யித்தீன் *என்றவரும் -ஏத்தவரும்* ***முஹ்யித்தீன் முஹ்யித்தீனே-8***.
(^மேல் ; <சிவ,புதுமை ; >இணக்கம்,சந்தோஷ.)

வாடி மெலி பயிர் போல- எரியிலிடு தளிர் போல- வலையிடு பறவை போல,
வளியில் உழல் பூனை போல- நிலை தவறும் மதிபோல- வறுமை அடர் இளமை போல,

ஓடிமறு குழை போல- குழியில் விழு நரி போல- ஒளியினது ராவு போல,
உணர்வுநிலை தடுமாற- உடலின் நிலை தடுமாற- உறுதி பெற வழியின்றியே-9.

தேடி உரை குழறி நுந் திருமுகத் தோற்றமே -தேறும் ஆதாரம் எனவே,
தெரிசிக்க வந்தனன் அன்பின் அருள் செய்குவீர்- சமயம் இதுவே,
மூடி வருந் துயர்கள் யாவும் மகிழ்வித்த புகழ்- முதிய பகுதாதின் அரசே,
முஹ்யித்தீன் முஹ்யித்தீன் என்றவரும் -ஏத்தவரும் முஹ்யித்தீன் முஹ்யித்தீனே-10.

சுத்த மாதவர் ஒருவர் மலவாதை(கழிக்க) சபையினிற் சுகமாக அருள் செய்தவா,
^சோரனுக்குள் அஞ்சு முறை நீக்கி -ஒலியாய்த் துலங்க வரம் அருள் செய்தவா,
சுத்தமார் பறவையைத் துண்டாக்கி- உயிரோடுதான் ஏக அருள் செய்தவா,
தடை கொண்ட முடவனுக்கு கடும் பிணிகள் அற்ற உடல்- அந்தறிவும் அருள் செய்தவா-11.

(^திருடன்.)

கத்தனோடு எப்போதும் அகலாது தெளிவாற் கலந்து -அடியார்தமை ஆளுதற்கு,
காவல் கொண்டு உலகத்தை- ஒரு நொடிப்பொழுதிலே கண்டுணரும் என் கண்மணியே,
முத்தியே >ஆய-நகர் பகுதாதின் வள்ளலே! முறைகேடன் எனை ஆள்குவீர்,
முஹ்யித்தீன் முஹ்யித்தீன் என்றவரும் ' ஏத்தவரும் முஹ்யித்தீன் முஹ்யித்தீனே-12.
(>தாய்.)

உடல் எரிவு -கைகால்கள் எரிவு- நெஞ்சு எரிவுமுடன் உலர்த்தலொடு வெப்பம் உழலும்,
உட்காந்தல் அதிசார மிள்ளையொடு ^பாண்டு <கய >மூதைவலி °குன்ம மேகப்,
படலமுக வாதமது மேகமிழி சூலை சொறி பங்கினோடு புண்கிரந்திப்,
பட்சவர கந்தாக மழிகுட்ட முதலாய் பன்-நோய்கள் எந்நாளுமே-13.
(^வெண்மை நோய் ; <மெலிதல் ; >இளமை மூப்பு ; °வயிற்று வலி)

கடலுலகிலுங் களரும் நாமத்தை ஒருபோது கருதுவார்க்கும் அணுகிடாக்,
காரணக்குரு என்கிற உள்ளத்தின் மாறாது கனிவாய்த் துதிக்கும் எளியேன்,
^முடலை உள பிணிபாவம் நீக்கி அருள் புரியும் எம் முதல்வரே! பகுதாதில் வாழ்,
முஹ்யித்தீன் முஹ்யித்தீன் என்றவரும் - ஏத்தவரும் முஹ்யித்தீன் முஹ்யித்தீனே-14.
(^வலி)

மதிவிட்டு மேலவர் சொன்னிலை விட்டு- நல்வினையின் வகைவிட்டு
மாறுநடையின்,
வழிவிட்டு- மானமுள முறைவிட்டு- ^வேசியரின் <மயல் விட்டிடாதபடியாற்,
கொதிவிட்ட பாவ வனல் எதிரிட்டு வெம்பிணிகள் கொளவிட்டுடத் துயரெலாங்,
குதிவிட்டுடற் பொறையை மிதியிட்டு அலைப்ப வீணர் குலைவிட்டு உழன்று
*அலறியே-**15**.*

(^துர்நடத்தை பெண்டிர் ; <மயக்கம்)

துதிவிட்ட பெயலிரு விருவிட்ட நீர் மழை சொரிந்திட்டு வாய்விட்டு ஆறாய்,
தொனிவிட்டு நும்மடியின் முறையிட்டு அடைந்தனன் என்று உனை விட்டிடாது
அருள் செய்குவீர்,
முதுவிட்டிடாது உறவு தொடர் விட்டிடார் வளரும்- முக்கிய நகர் பகுதாதில் வாழ்,
முஹ்யித்தீன் முஹ்யித்தீன் என்றவரும் - ஏத்தவரும் முஹ்யித்தீன் முஹ்யித்தீனே
***-16**.*

நன்மறை விளக்கும் நபி நாயகர் பொருட்டினாலும் -நனிபொருள்
பொருட்டினாலும்,
நானெறியினுக்குரிய ஒலிமார் பொருட்டினாலும்- நாட்டிய தவப்பொருட்டாற்,
புன்மதி கலங்க வரும் வெம்பிணிகள் பலவாதை புனையும் ^பலாய்கள் எல்லாம்,
*புறமே அகன்றொழிய- அகமே மகிழ்ந்தினிய- புகழே! புகழ்ந்து கொள்வே-**17**.*
(^சோதனை.)

வென்மதியினால் இறையிடத்தாற் பலன் பெற வியந்தருள் சுரந்து அருள்வீர்,
^வெப்பு முதலானவையை வேறிடத்தே ஏக-வழி விட்ட வலிமைக் குரிசிலே,
முன் மகிமையுள்ளவரும்- நும் மகிமை கொள்ளுமொரு மூதெழில் கொள்
பகுதாதில் வாழ்,
*முஹ்யித்தீன் முஹ்யித்தீன் என்றவரும்- ஏத்தவரும் முஹ்யித்தீன் முஹ்யித்தீனே-**18**.*
(^வெம்மை நோய்.)

வேதம் மொழியால் அறிவின் மேலவர்களால் எரிகண் வெகு நாவினர்களாலும்,
மீறும் அயலார் கற்பின் மடவியர்களால்- ஜின்னின் வெம்மையாற் பிணி
அணுகினும்,
யாது முரண் அகன்று அப்புறங் காணாது திரிந்தோட -நும் கருணையின்,
இரு விழிகளோடு அலர்ந்தெழு சந்திரமாம் முகம் என-எதிர் காண வந்தருள்
*செய்குவீர்-**19**.*

நீத நபிநாதர் மருமகனாகி வந்த அருள் மலர் அலிதம் பேரனார்,
நினைவுறுதி மாறாதவர் அபூஸாலிஹ் உயர் நெறிவள்ளல் ஈன்ற மணியே,

மூதறிஞர் போற்ற வரும் தீபமே! பகுதாது ^மூவுலகும் ஒளிர் சோதியே,
முஹ்யித்தீன் முஹ்யித்தீன் *என்றவரும்- ஏத்தவரும்* **முஹ்யித்தீன் முஹ்யித்தீனே-20**.
(^பூமி-அந்தரம்-சுவனம்.)

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

நாகூர் ஆண்டகை பேரில் முனாஜாத்து

^அஹதாய்க் குறிப்பு ஒன்றில்லானாய் அளவும் அறிவும் எட்டானாய்,
நிகராப் பொருளாம் இறையவன்தன் நெறி கொள் பெருமைக்கு உறுபொருளாய்,
அஹ்மது இறஸூல் நபி *பேரராய்- >அவ்லியாக்கள் கண்மணியாய்த்,*
தகுதி பெருகுந் ^தெந்நாகை **ஷாஹுல்ஹமீது நாயகமே-1**.
(^ஒன்றில் பலதான ; >இறை நேசர்கள் ; ^நாகூர்)

^பத்ரை அழைத்து >வகிர்த்து பின்னும் படர் வானுப்பும் நபி இறஸூல்,
புதல்வி ஈன்ற <மணி வழியே புதுமை கொண்டு வருங்கோவே,
நிதமே விளங்குங் **காரணமே**- *நிலவுங் கருணைப் பெருங்கடலே,*
சதமே தங்கள் திருப்பதமே- **ஷாஹுல்ஹமீது நாயகமே -2**.
(^மதி ; >பிளந்து ; <நன்மை.)

^தவ்பா என்னுங் குற்றநிலை தாங்கும் <ஆரிஃபீன்கள் எல்லாம்,
>நவமே கொள்-உம் திருக் °கழலே- நாளும் நம்பும் அடியவர்கள்,
•பவமே செல்லும் அருணயம்- பார்த்தே இதங் கடர வேண்டுந்,
தவமே! நிதியே! தெந்நாகை **ஷாஹுல்ஹமீது நாயகமே -3**.
(^பாவ மன்னிப்பு ; <ஞானவான்கள் ; >சினேகம் ; °கால் ; •பாவம்.)

^தாவிதாகுந் துறை நடுவே தங்குந் துறையின் <அஸ்மாக்கள்,
மோல் இலங்க >ளுஹூறாக முழங்கும் மணியாய் அம்மணியே,
காலம் முழுதும் திகழ் சுடரே- கவலை யாவுஞ் செலும் மருந்தே,
°ஸாலிஹானோர் தவப்பயனே- **ஷாஹுல்ஹமீது நாயகமே -4**.
(^அரிது ; <நாமங்கள் ; >தோற்றம் ; °தவத்தோர்.)

^ஜவ்ஹறாகிக் <கபூலாய்ச் சிறந்த >ரிழாவாகியது,
குவி கொண்டு •மிதாலாய் அவையோடுங் குன்னிற் பிறந்த ○றூஹாகி,
எவையுமாகி நின்றவர்தம் இனிய புதிராய் உதிராத,
தவமும் பயனுமாகி நின்ற- **ஷாஹுல்ஹமீது நாயகமே -5**.

(^பெருகி ; <பொருந்தும் ; >இறை பொருத்தம் ; •சிறந்த ;○உயிர்.)

^ஹறமாம் <பைத்துல்-மஃமூறாம்- அதுவாங் கஃபா நாடினவர்,
திறமாம் படியே அருளும் அருள்- ஸெய்யித் ஒலியே! நும் பொருட்டால்,
அறமாம் பலாய்கள் °சதாயிதுகள் அணுகாது அடியார் தம்பாலிற்,
•தரை மேல் வாராது அகற்றும் ஐயா- **ஷாஹுல்ஹமீது நாயகமே -6**.
(^புனித ; <7ஆம் வானத்து பள்ளிவாயில்/quraan 52:4 . ;°கடன்கள் ; •பூமி.)

°காஸாயினான இவ்விடத்தில் கதித்த >துற்றத்துல்-பைழா,
சாய்ந்த மணியிற் திருமணியாய் வித்தாய் முத்தாய் எத்தாத,
<அசாவாற்கள்தனை எழுப்பும் அறத்தன் மூர்த்தியாகி நித்தந்,
தசா மாதவத்தின் அரசு வையும்- **ஷாஹுல்ஹமீது நாயகமே -7**.
(°உயரிய ; >ஒளிமிக்க வெண்மை சுவனத் தோட்டம் ; <புகழ் கவிகள்.)

<தாயிமாக >ஐத்புடையோர் ^ஸாலிஹுக்கு உத்தரவானவர்கள்,
°காயிமாக விரண்டிடையார் கதிக்கும் விழியாய் விதிவிதிக்கும்,
ஆயுங் கலைகள் உரை நாவால்- ஆலம் பரிக்கும் பெருமானே,
சாயுந் துன்பந் தெந்நாகை- **ஷாஹுல்ஹமீது நாயகமே -8**.
(<நிரந்தர ; >இறை லயிப்பு ; ^ஆன்மீக வழியோன் ;°நிலை கொண்ட.)

^தாத்தாய் <ஸிஃபாத்தாய் >அஸ்மாவாய்த் தங்கும் அறுவாஹுடன் கலந்த,
பூத்தாய் ஸிஃபாத்தாய் •அஜ்ஸாமாய் புகழும் ○இன்ஸான்- காமிலுமாய்க்,
*கூத்தாய் இவைகள் "**ஹூ**"வாகிக் கொள்ளும் அறிவாய் விளங்கி நிற்குஞ்,*
°தாத்தின் பயனே நயனாகும்- **ஷாஹுல்ஹமீது நாயகமே -9**.
(^உள்ளமை ; <பண்புகள் ; >பெயர்கள் ; •ஜட ;○பூரண மனிதன் ; ° மூல உள்ளமை)

றஹ்மான் என்னும் பெயரிடத்தே நிலையும் ^றூஹும் அடங்கலுக்கும்,
அகமாயப் புறமாய் அனுபவிக்கும்- அஹ்மது இறஸூல் வழிப் பொருளே,
மிகவே நம்பும் அடியார்கள்- மிடிமைத் துயரம் அணுகாமற்,
தகை சேர அருட்கண் தருவீரே- **ஷாஹுல்ஹமீது நாயகமே -10**.
(^ஆன்மா.)

^ஸீனத்துடைய <துன்யாவைச்- சிறந்த மனைவி எனக் கலந்து,
>மானத்துடைய °ஆஃகிறத்தை- மறக்கும் புல்லோர் நல்லோர் என்று,
ஈனத்துடனே உறவாடி இதயம் மருகுஞ் சிற்றடியேன்,
தானத்துடையீர் அபயம் ஐயா- **ஷாஹுல்ஹமீது நாயகமே -11**.

(^அழகு ; <உலகு ; >கொடை ; °மறுமை.)

ஸிற்றில் •உஜூது மழ்ஹறுக்குஞ் ஸிற்றில் ஐக்கிய எவைகளுக்குஞ்,
ஸிற்றில் அஸ்றாயீல் இடத்தில் ^ஸிற்றில் <கத்றாய் >இறாதாவில்,
ஸிற்றில் °அஸ்மா உடைய நபி- திருக்கண்மணியே பெருமணியே,
%ஷற்றொன்றும் அணுகாது ஆண்டருளும்- **ஷாஹுல்ஹமீது நாயகமே** ***-12***.
(•உள்ளமை ; ^இரகசிய ; <அளவு ; >நாட்டம் ; °பெயர் ;%கெடுதல்)

°ஷவ்னுஞ் சூழும் பெரும்பொருளே! ^ஷைகுல்-மஷாயிகாகி நிற்குங்,
<கவுனுள் அடங்கும் >மஹ்லூக்குக்கு கருத்துங் காட்டும் ஷுஹூதுடையீர்,
கவனம் யாவும் அணுகாமற்- காக்குங் கிருபை நிறை கடலே,
தவமுந் தகுதி உடையவரே- **ஷாஹுல்ஹமீது நாயகமே** ***-13***.
(°பொன் ; ^குருக்களின் நாதர் ; <இருப்பு ; >படைப்பினம்.)

<ஸித்குங் >கித்புங் கலந்த உடற் தினமும் பொருளை விருப்பமுற்றுக்,
கதி கொண்டு அறியாதுளவோர்தங் கவலை அகற்றும் பரஞ்சுடரே,
மதியே! நிதியே! பொன்னின் நெடு மலையே- நிலையை நம்பினவர்,
சதமே பதமே அருள் புரியும்- **ஷாஹுல்ஹமீது நாயகமே** ***-14***.
(<மெய் ; >பொய்.)

^ழலாலத்துடைய இருள் நீக்கி நன்மை விளைக்கும் நிதிப் பொதியே,
<விலாயத்து உடையோர்க்கு கனக் குருவே- மிடியோர்க்கு உதவும் அகமேரே,
>கலாபந் திகழும் மயில் வடிவங் காட்டும் நயினார் மகமகவே,
ஸலாமும் பேறும் பெறும் அரசே- **ஷாஹுல்ஹமீது நாயகமே** ***-15***.
(^பாவம் ; <இறை நேசம் ; >சந்திரன்.)

தாஹா என்னும் மஹ்மூதர் தம்பின் ^புடவிக்கு இறையவன் சொல்,
வாகாய் நிற்கும் படியாக வகுத்தேன் சிலர் என்று அருளுடையோர்,
மேகாங் <குத்பாய் வரும் அரசே! மோட்சப்பதி வாழ் **பெருமானே**,
சாகா வரிசைத் துறை உலவும் **ஷாஹுல்ஹமீது நாயகமே** ***-16***.
(^பூமி ; <உலகின் அச்சானவர்.)

^ழல்லாங் காட்டும் பேழையறு நறும் புருசைத்தும் பெரும் படையிற்,
கல்லா மனைவி விடுத்தசையிற் ஒக்கும் விடயத்தை அரிதாக்கும்,
நல்லார் உவக்கும் நபி பேரா! நானாய் உவக்கும் மகமேரா,
<சல்லாபங்கள் உறை மணியே- **ஷாஹுல்ஹமீது நாயகமே** ***-17***.
(^நிழல் ; <இறை சம்பாஷனை.)

ஆதியாய் நிலையதனில் அடையுஞ் ஸப்பும் உசப்பிடவும்,
நீதியாகக் கண்டு அரு நெறியுங்- குறியும் உடையவர்கள்,
ஓதியோதி உவக்க நுந்தன் ஒளியதான மலரே! எனக்கறிவே,
சாதி மேன்கை உறுங்கோவே- ***ஷாஹுல்ஹமீது நாயகமே -18****.*

^ஙய்பாயுள்ள பொருள்களெல்லாங்- கண்டே உணரும் அகக்கண்ணும்,
<அஜாபாயுள்ள காரியங்கள் அனைத்தும் -அறைக்கும் என் குருவே,
மெய்ப்பால் >விகாரம் அணுகாமல்- விரும்பி நாளும் ஆண்டருளுஞ்,
°ஸபபாய் உரிமைப் பெருங்கடலே- ***ஷாஹுல்ஹமீது நாயகமே -19****.*
(^மறைவு ; ^புதுமை ; >காமம்,வேற்றுமைப் படுதல் ; °காரண.)

^ஃபனாவுல் ஃபனாவாந் துறை அடைந்தார்க்கு- பண்புந் தவமுந் தருங் கோவே,
அனாதி இறைக்கும் <ஷுஹூதுடைய வருசை நிதியே பொந்நிதியே,
•கனாவாம் என்னும் உலகமதிற்- கதி தந்து எளியோன் முகம் பார்த்துத்,
°தனா தந்து உகப்பது எப்போது? ***ஷாஹுல்ஹமீது நாயகமே -20****.*
(^இறையில் லயித்தல் ; <இறையில் மருவல் ; °புகழ்ச்சி ; •கனவு.)

^கிந்தீல் இடத்திற் சிறந்த ஒளி கிளரும் <யகீனில் எழுந்த கனி,
சிந்தா குலங்கள் நீக்கும் மணிச் சேர்ந்தார் சுவர்க்கப் பெருஞ்சுடரே,
நாத வரிசை வளர் நாகை- நாவூர் பாவூர் கோவூரே,
சந்தாடவியே கற்பகமே- ***ஷாஹுல்ஹமீது நாயகமே -21****.*
(^ஆன்மீக விளக்கு ; <உறுதி)

ஹாவே முதலாய் ஐந்தெழுத்திற் காட்டு நடுவே நாளாக,
மேவு முதற்போல் புவியிடத்தும்- விரிந்த புறப்பேர் மற்றிடத்துங்,
கோவாய் நிற்கும் ஆதி எனக் குறி கொள் வினையை உடையவரே,
தாவும் பெருமைத் தெந்நாகை- ***ஷாஹுல்ஹமீது நாயகமே -22****.*

லாமும் ஹேயும் மகாமுமாய் நான்கு மூன்றாகி விளங்குவது,
ஆமாம் உண்டும் அதின் மறைய- வடக்கும் பொருளும் அத்துறையாய்,
நாமம் பெற்றோர் வழி பெற்றே- நாடும் ^விலாயத்து இயல்பு பெற்றே,
தாமம் பெற்றே வளர்ந்தொளீர்- ***ஷாஹுல்ஹமீது நாயகமே -23****.*
(^இறை நேசம்.)

முஹம்மதிறஸூல் மணி போன்று முழுதுணர்ந்த ***ஹுஸைன் மரபிர்****,*
புகழும் ^இர்ஃபான் ஒருவர் அருள் புரிந்த ***ஸையிது ஹமீதுத்தீன்****,*
மகவாம் பாத்திமா *உதவு மணியாய் உலகமெல்லாந்,*

தகை கொள் அமுத <குணாலயமே- **ஷாஹுல்ஹமீது நாயகமே** -24.
(^ஞானம் ; ^இறைமை.)

நூறு முதலாம் நான்கு பொருள்- நூறு எண்நான்கு பதவியின்,
ஈறிலிருக்கும் அடியார்கள் இதயம் உணரும் மணிவிளக்கே,
வீறுந் தவமும் பெருஞ் செல்வமும்- வெற்றி அனைத்தும் அரும் உந்தந்,
தாறு மணிப்பொன் ^றவ்ழாவின்- **ஷாஹுல்ஹமீது நாயகமே** -25.
(^சமாதி பூங்கா.)

^வாசித்தாவாய் வரும் <நயினார் வழியில்- ஒழுகும் நெறி பூண்டு,
நேசித்து அனேக மாட்டாரை நினைவுட்படுத்துந் தவப்பேறே,
பூசித்தறியாச் சிறியவனும்- பொன்னின் பதமே கெதி கொண்டோன்,
ராஜத்தொழிலே நாளுமையா- **ஷாஹுல்ஹமீது நாயகமே** -26.
(^இறைக் காரண இணைப்பு ; <நபிகள்.)

^ஹவாவில் எழுந்த நாகம் அதைக் -காட்டுந் தகுதித் திருமணியே,
உலாவி மதியாய் வரும் ஷைகு யூஸுபினையே >தானியென,
<ஜவாபின் நிறுத்தி முறைமுறையே- தயவு புரியுந் தெந்நாகை,
°தவாபு புரியும் றவ்ழாவின்- **ஷாஹுல்ஹமீது நாயகமே** -27.
(^பேராசை ; >இரண்டாம் குருவாக ; <பதில் ; °பரிசு,பலன்.)

யாது வளரும் உளத்தோடும் இனிமை பெருகுங் கண்ணோடும்,
போதம் அமுதக் கனி அறிவே- பொங்கும் என்றன் தவப்பயனே,
கோது விளையாக் கொடுந் துன்பங் கொள்வர் யாருஞ் சுகம் பெறவே,
^தாது மலர்த் தாள் தர வேண்டும்- **ஷாஹுல்ஹமீது நாயகமே** -28.
(^பூவிதழ்.)

சிந்தை பெருகுங் களி பூண்ட ஸெய்யிது அப்துல் காதிர் என்போன்,
வந்துதிக்கும் பயன் உதவி மகவே! என்றுரைக்கும் நயன் உதவும்,
புந்தி மகிழ்கா ^**மாணிக்கப்பூர்** வாழ் **ஹஸன்குத்தூஸு** உதவுஞ்,
சந்த நிதியே தெந்நாகை- **ஷாஹுல்ஹமீது நாயகமே** -29.
(^ஆண்டகை பிறந்த ஊர்.)

○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○○

நாகூர் ஆண்டகை அட்டகம்

அறிவிற்கறிவாய் அதின் இலங்கும் அரிய ஒளிவாய் உலகனைத்தும்,
நெறியிற் புறக்கும் வல்லவன் தன் நிறைந்த கருணை உறையகமே,
பெறுதற்கரிய பெருந் தவத்திற் பிறக்கும் முஹம்மதி றஸூல்தம்,
^ஷறகிற் கனியே! நாகை வளர் **ஷாஹுல் ஹமீது நாயகமே**-1.
(^சரியை.)

^நவமே உலகந்தனைப் படைத்து நடுவுநிலை கொண்டு அடைய வைக்குந்,
<துவமே புரக்கும் வல்லவன்பாற் சுகமே >துஆவின் பலன் அருள்வீர்,
பவமே அணுகாத் தனைய பலர் பயன்கள் சாந்தா சாஹிபுக்கும்,
தவமே! அருளே! நகை வளர் **ஷாஹுல் ஹமீது நாயகமே**-2.
(^சினேகம் ; <அசையா ;>பிரார்த்தனை.)

ஓங்குமுள்ளப் பொருள் அனைத்தும் உதவும் மகிமை பல கோடி,
°தூங்கு முஹம்மதிறஸூல் மெய்ச் சுருதி கருதி ^விருது உடையீர்,
தாங்கு நிலைமை பெற மைந்தர் தவப்பேறு உங்கள் >ஃகாதிமுக்குப்,
பாங்கின் அருக நாகை நகர் பதியே- **ஷாஹுல் ஹமீது நாயகமே** -3.
(°அசையும் ; ^கொடி,வம்சம் ; >பணியாள்)

வரிசை ஓங்கும் நெறி ^நான்கும் வழுவாது ஆளும் பெருங் கருணைக்கு,
உரிய <மகமே எவ்வுலகும் ஒளிருந் தூண்டா மணிவிளக்கே,
தருவே செல்வந் தழைத்தோங்குஞ் சந்தா சாஹிபு என்பவர்க்குஞ்,
சரண பேறு பேறருள் புரி- **ஷாஹுல் ஹமீது நாயகமே**-4.
(^சரியை கிரியை யோகம் ஞானம் l <இன்பம்.)

உங்கள் பாதந்தனை விளக்கி ^உளமே கொள்ளத் தொண்டு இயற்றித்,
தங்கும் அடிமைகளில் எளிய தகைமை உடையார் ஆதலினால்,
அங்கங் கவலைக்கு ஆகாமல்- அகத்தின் மகிழ்ச்சி குலாவி வரச்,
சங்கை அருள்வீர் வந்நாகை- **ஷாஹுல் ஹமீது நாயகமே**-5.
(^உள்ளம்,ஆன்மா.)

விளங்கும் பொருளிற் சிறந்த மறை வேதக் கடலாகிய ^நயினார்,
வளங்கொள் பேரர் என விளங்கும்- வழீயீர் நன்மை ஒளியீரே,
துலங்குஞ் செல்வப் புதல்வரொடு சுகமே பயில்வான் நன்னவர்க்குக்,
களங்கம் <இலதாய் அருள் நாகை- °**கௌது ஹமீது நாயகமே**-6.

(^எஜமானர் ; <இல்லாதாய் ; °ரட்சிப்பதில் மேலானவர்.)

பெருகும் <நபிமார் பொருட்டாலும்- பேறும் >ஒலிமார் பொருட்டாலும்,
உரிய ^முஃமீன் அவராலும்- உண்மை உறைந்தவராலுங்,
கருணை இறையோன்பால் இரந்து -கௌது முஹம்மது என்பவர்க்குந்,
திருவும் மருவும் அருள் நாகை- **ஸெய்யிது ஹமீது நாயகமே-*7*.**
(<தீர்க்கதரிசிகள் ; >இறை நேசர்கள் ; ^இறை நம்பிக்கையாளர்.)

நெஞ்சிற் கவலைப் பிணி நீங்கி- நினைத்தப் பொருளும் பெருஞ் செல்வந்,
தஞ்சை அரசன் பெற அளித்த- தவமே! எங்கண் அருமணியே,
வஞ்ச மறவுட் களிப்பேற- வளருஞ் சாந்தா சாயிபுக்குத்,
தஞ்ச நிதியே! நாகை வளர்- **ஷாஹுல் ஹமீது நாயகமே-*8*.**

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

நாகூர் ஆண்டகை அகவல்

ஆதி மெய்பொருளாய் ஆகியெல்லாஞ் ஜோதி மெய்ப்பொருளிற் துலங்கிய அறிவும்,
பற்பல கோலப் பயனெலாம் உணர்ந்து சொற் பயனாகித் தோற்றிய அருளும்,
இன்பமுந் துயரும்- இதற்குள வினையும் அன்புள ஜீவன் அனைத்தினுங் காட்டி,
*ஒன்றியும் ஒன்றா உறு பொருளாகி நின்றவன் கருணை நிறை தருமணியின்-**1***

காரணமாகிக் கணக்கறுந் தொகையும் பூரணமாகிப் பொலிவு கொண்டு எங்கும்,
பொறையும் அறிவும் புனிதமும் இரக்க நிறையு நடுவு நீதியுங் குணமும்,
மானமுந் தயவும் மாட்சிமை இயல்புந் தானமுந் தவமுந் தாங்கிய நயினார்,
முழுமதி என்னும் ***முஹம்மது நபி****தம் எழில் பெறும் பேரர் என விளங்கும் அரசே-**2**.*

குருவே! நவமே! குலந்தரு நிதியே- திருவே! அருளே! -செவ்விய வாழ்வே! -விளக்கொளிச் சுடரே! வேத மெய்ப்பலனே களக்கறுஞ் செந்தேன் கமழ் தருங் கனியே,
கருத்தொரு மதியே- கண்ணின் மணியே பொருத்துஞ் செயலே பூரணப் பண்பே,
*நந்நபி பொருட்டால் நாயகனிடத்தில் முன்னி நல்லது ஆகமுற்று அருள் முறையே-**3**.*

நாடொறுங் கேட்டு நயனருள் புரிக! வீறும் அடியார் யவ்வமது அகற்றிப்,
பேரிடற் துன்பம் பிணிகள் அச்சம், காரழற் குணமற்று அகன்று நிந்நாமந்,
நேத்திரஞ் செய்யத் துணையாய் இணையிற் பாத்திரம் பெற்றுப் பாக்கியம்
பெறவே,
முந்தி சேர் நாகை முதுநகர் நத்துவம் பூண்ட **ஷாஹூல் ஹமீதே***.-4*

¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤

சிலேடை மாலை

இரு பொருள்

கட்டளைக் கலித்துறை

ஆரணத்தால் அருள் ஓங்கிய ^மக்கத்து அஹ்மதுதம்,
பூரணத்தால் உயர் பேர் வரிசை பல பொங்களித்தேன்,
ஆரணத்தார் பகுதாது பதி மலர் <நாகை வருங்,
காரணத்தார் திரு மின்னளித்தார் **அப்துல் காதிறுவே***-1.*
(^நபி பிறந்த ஊர் ; <நாகூர்.)

முட்டுப்படும் பிணியால் நொந்து உடல் முழுதும் அயர்ந்தே,
தட்டுப்படும் அறனுக்கு எழிலாறுந் தடமுந் தருங்,
கிட்டுப்படுங் குறட்டாற் துயர் போக்குங் ^கீழர் பகுதாத்,
கட்டுப்படும் புகழ் நாகை அருள் **அப்துல் காதிறுவே***-2.*
(^கிழக்கு.)

வேண்டும் உணவு கறியிடும் ^வாரண மீண்டுலவ,
வீட்டும் எழில் இயன் நாகை அதிக அருள் பெருகல்,
ஓட்டு மறையதனால் ஐயா ஒலி ஓங்கும் நீதி,
காட்டும் பணி பகுதாது உயர் மன்னர் **அப்துல் காதிறுவே***-3.*
(^சுரபி திருவோடு.)

பூவுடன் மண நாகை அரும் புகழ் பூமணியின்,
ஆக நிறை பகுதாது உயர் செல்வத்து அரசர் சுகம்,
போக வசத்தினிற் போகாது இருந்தவன்- பூவில் அருள்,
தாக விழிமணி ஒன்றியவன் **அப்துல் காதிறுவே***-4.*

வீறிய நஞ்சுக வெஞ்சரர்ச் சுடு வேகமிகு,
மீறிய புன்சொல்லிற் துஞ்சிய மூரி வெளியிறப்பக்,
கூறிய சோகம் அழித்த அருள் நாகை கொண்டேற்ற வண்மை,
ஆறி அவ்விற் தருவீர்- பகுதாது ***அப்துல் காதிறுவே-5***.

நாதந் தருமின் பகுதாது புகழ் நாளும் நின்றீர்,
போதந் தரும் புண்ணியத் துரையீர் பஞ்ச பூதவுடற்,
கோதந் தருஞ் செயலுள் உரிந்தோடக் கொடுமை கொண்டு,
காதந் தராது கதி நாகையீர் ***அப்துல் காதிறுவே-6***.

மயிலணி நட மாதரின் ஆசை நறு நிழலிற்,
ஜெயிலான் உலவிய நாவூர்- புகழிற் சிறப்புடையீர்,
பயிலாதவனைப் பயிற்றி வைத்தீர்-பதி நேர்மை பெறக்,
கல்லாதவனுக்குங் கை கொடுப்பீர் ***அப்துல் காதிறுவே-7***.

சொற் பகுதாது பலன் நிறைவாகத் துதிக்கும்படி,
நற் பகுதாபதர் நாவூர்ப் புகழ்ச்சி நராதிபரே,
பொற் பகுதாதாகிய மண்மக நீக்கிய போத இன்பங்,
கற் பகுதாது அருளால் உணர்ந்தீர் ***அப்துல் காதிறுவே-8***.

(ஷெய்க் அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவர் காஹிரி)

•••

ஹக்கு பேரில் முனாஜாத்து

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

காவலாய் நிற்கும் வல்லோன் கர்த்தனாச் சீவனல்லால்,
ஆவலாய்ப் போற்றி வாழ்த்தி- அதற்கு உணவளித்த கோமான்,
நாவினால் எளியோர் கேட்கும்- நாட்டத்தின் படியே தந்து,
*தாவிலா றஹ்மத்தாலே தற்காக்கும் பொருள்தாமே-**1***.

வேறு

^அருவாய் <ஆலம் அடங்கலுக்கும் அரிய பொருளாய் விளங்கி நிற்குந்,

திருவாய் அமையாப் பேரொளிவாய்த் திகழ்ந்து நாளும் பராபரிக்குங்,
கருவாய்க் கருவி நுண்மணியாய்க் காட்சி அருளும் >றஹ்மானே,
உருவாய்த் துலங்கும் மன்னானே- உனது கிருபை அருள்வாயே-**2**.
(^உருவின்றி ; <அண்டம் ; >பாரபட்சமன்றி பராமரிப்பவன்.)

நாடும் நாட்டப் பயனது போல் நனி கொள -ஆலம் அடங்கலையும்,
<ஒடு பெறவே படைத்து அவைக்கு- முன்னும் இரணம் மிகக் கொடுத்து,
ஈடிலாது காத்தளிக்கும் வேதப் பொருளே றஹ்மானே,
கூடும் நின்றன் அடியார்கள் குறைகள் தீர்ப்பாய் ^**காதிறுவே-3**.
(<நீள்தல் ; ^**வல்லான்**.)

உனது கிருபைக் கடலிடத்தில் உதித்த மணியாய்த் ^தீனோர்கள்,
தனது சேமப் பொருளாகுந் <**தாஸீம் நபியார்** பொருட்டாலே,
கனதி >இலாஹி நாயகனே- கதியின் பயன் °யா •ஹாபிளுனா,
மனது கலங்கும் எளியோர்கள்- ○மறுக்கந் தவிர்ப்பாய் றஹ்மானே-**4**.
(^மறையோர் ; <பரிசுத்த ; >வணங்கப்படுபவன் ;°ஏ; •பாதுகாவலன் ;
○குழப்பம்,இக்கட்டு.)

புவியில் விளங்கும் ^நபிமார்கள் புகழும் பொருட்டாலும் முன்னுள்ள,
<அவுலியாக்கள் >ஷுஹதாக்கள் அரிய பெரியோர் பொருட்டாலுந்,
°துவமே •முஹீத்தே தூயோனே துலங்கு ○நாஸிறானவனே,
கவலை நீக்கி ●பலாய்கள் எல்லாங் காணாது அகற்றுவாய் றஹ்மானே-**5**.
(^தீர்க்கதரிசிகள் ; <இறை நேசர்கள் ; >தியாகிகள் ;°அசைவற்ற ; •அழிப்பவன் ;
○உதவியாளன் ; ●சோதனை.)

துன்பம் நீக்கி அறிவு விளக்குந் தூய வேதமொரு நாலின்,
இன்பம் உனது பொருளாலே இனிய உன்றன் பொருட்டாலே,
அன்பு புரியும் ^ஹபீபே! எம் அகத்து உயிரே <தய்யானே,
>வன்பு மாற்றி நல்வரிசை °வண்மை அருள்வாய் றஹ்மானே-**6**.
(^நேசனே ;<நீதியாளன் ; >வன்மை ;°மெய்மை,குணம்.)

உள்ளங் கலங்கி தத்தளித்தே உணர்வு மயங்கி நின்னடியார்,
வெள்ளங் கண்ணின் மிக ஓட ^வெருளுந் துயரம் அணுகாமற்,
கொள்ளுங் கிருபை <மவ்லானா- >ஹுதாயே °வதூதே •ஙப்பாறே,
கள்ளநோய் தங்கடங்கள் காப்பாய் காப்பாய் றஹ்மானே-**7**.
(^அஞ்சும் ;<எஜமான் ; >நேர்வழி காட்டுவோன் ;°அன்பாளன் ;•மன்னிப்போன்)

வேதம் நிறைந்த ^ஸூறத்தோடும் விளங்கும் <ஆயத்து அதனாலே,
ஓதும் பொருட்டால் >முஃமீன்கள் உள்ளும் பொருட்டால் ஆணையினாற்,
°போதம் பெருகும் உன்னுடைய புகழுஞ் சிறப்பின் •ஆக்கினையாற்,
*○காது பலாய்கள் அணுகாமற் காப்பாய் காப்பாய் றஹ்மானே-**8**.*
(^மறை அத்தியாயம் ; <மறை வசனம் ; >விசுவாசிகள் ; °ஞானம் ; •கட்டளை ;
○கொலை.)

வள்ளல் மஹ்மூத் எனும் ^நயினார் வழியில் ஒழுகி உன்னுடைய,
<விள்ளும் >மார்க்கந்தனை எடுத்து விளக்குந் °தீனோர் ஆகையினாற்,
தெள்ளும் அறிவே மெய்ப்பொருளே! தெளிவாய் எங்கள் கண்மணியே,
*எள்ளும் ஆபத்து அணுகாமல்- இன்பம் புரிவாய் றஹ்மானே-**9**.*
(^எஜமானர் ; <மலரும் ; >இஸ்லாம் ; °மறையோர்.)

அடியார் செய்யும் பிழைகள் எல்லாம் ஆளும் இறை நீ பொறுப்பதல்லால்,
படியோர் வேறேயில்லை மன்னா! பயனும் ^நயனும் அருள்வோனே,
நெடியோன் இம்மை மறுமையில்- நீதியுடையோன் ஆகையினாற்,
*கொடிய பலாய்கள் அணுகாமற்- குறைகள் தீர்ப்பாய் றஹ்மானே-**10**.*
(^இன்பம்,கொடை.)

முன்னும் நீயே- உடைய பொருள் முழுதும் நீயே- ஆண்டருளும்,
பின்னும் நீயே- ^இரப்பையெல்லாம் பேணி நீயே அன்றி இல்லை,
என்னும் நீயே மென்மேலும்- என்றும் நீயே காப்பாயே,
*<உன்னும் அடியார்க்கு ஒரு தீங்கும் வாராது அருள்வாய் ரஹ்மானே-**11**.*
(^துஆ ; <நினைக்கும்.)

(ஷெய்க் அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவர் காஹிரி)

••

கதிர்காமம் ஹிள்று நபி தர்ஹா

உலக முஸ்லிம் வரலாற்றின் உன்னத அடையாளம்.

*இலங்கையின் ஊவா மாகாணத்தின் மொனரகல மாவட்டத்தில் அமைந்துள்ளதும், கொழும்பில் இருந்து **228** KM தூரத்தில் உள்ளதுமான இடமே- கதிர்காமம். இது இலங்கையின் நான்கு இன மக்களாலும்- புனிதமாக மதிக்கப்படும் பிரதேசம். இதில் பல்வேறு சமய நம்பிக்கைகளும், வரலாறுகளும், வழிபாடுகளும் இடம்பெறுகின்றன, ஒவ்வொருவரும் தமக்கான இடமாக- இதனைக் கருதுகின்றனர்.*

சில பதிவுகள், கதிர்காமம் பற்றிய முஸ்லிம் ,பூர்வீக வரலாற்று ஆதாரங்களையும், வழக்காறுகளையும் ஆராய்கின்றது.

*இவ்விடம் -பாளி மொழியில் **'கஜரகம'** என மகாவம்சத்தில், சிங்களத்தில் 'கட்டரகம,*
தமிழில்- கதிர்காமம்,
*அறபு மொழியில் **"ஹிழ்ரகம்"** என்று அழைக்கப்படுகின்றது. இதன் அர்த்தம்: ஹிழ்ரின் வசிப்பிடம் என்பதாகும்.*

*அந்தவகையில், ஹிழ்ர் நபி எனவும், இறைநேசர் எனவும் அறியப்படும் -**ஹழ்ரத் ஹிழ்ர்** அவர்களின் இடம் என்றே, இஸ்லாமிய வரலாறு இவ்விடத்தை பதிவிடுகின்றது.*

*இந்த இடம்-**12500** ஆண்டுகளுக்கு முந்திய மெசோலிதிக் கற்கால வேடுவ வழிபாட்டுக்குரிய ஆதாரங்களைக் கொண்ட இடம்- என தொல்பொருள் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இங்குள்ள பௌத்தர்களின் கிரிவிஹார ஆலயம் கிமு, **1**ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக கருதப்படுகின்றது.*

இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தில், ஆதம் உட்பட பல நபிமார்களின் வாழ்வுடன்- இந்த இடம் தொடர்புபட்டுள்ளது. இறுதி நபிக்கு முன்னரே, பல நபிமார்கள்-இங்கு வந்ததாக நம்பப்படுகின்றது.

யார் இந்த ஹிழ்ர்?

ஹிழ்ர்** என்றால் பச்சை மனிதர்/Green man என்பது அர்த்தம். இவர் ஓர் இறை நேசர். **மூஸா நபி** எனப்படும் Moses- இன் ஞானாசிரியர். **அல்குர்ஆனின் ஸூறதுல்

கஹ்ஃப்(*The cave*) *எனும் அத்தியாயத்தில்- இவர்களைப் பற்றிய ஆதாரங்கள் உண்டு. இவர்கள் இயற்கையோடு வாழ்ந்த புனித மனிதர். இவர்களது இறை நேசத்தால் இறைவன் இவர்களுக்கு* **மாவுல் ஹயாத்** *" எனும் நிரந்தர வாழ்வை பரிசளித்தான்.*

பாரசீக, துருக்கி, ஈராக் பாகிஸ்தானிய இலக்கியங்களில்- உயிரினங்களின் நேசராக இவர்கள் கருதப்படுகிறார்கள். மயில், சேவல், மீன் என்பன, இவர்களது அடையாளங்களாகவும் கூறப்பட்டுள்ளது. இவர்கள் இன்றும் உயிரோடு இருப்பதாகவும் ,இவரை ***ஹயாத்து நபி அப்பா*** *எனவும், சாதாரண மக்கள் அழைக்கின்றனர்.*

இன்னல்களின் போது அழைக்கின்றவேளை-இவர்கள் ஆஜராவதாகவும் இன்றும் மக்கள் நம்புகின்றனர்.

ஸ்கந்தர் எனும் பெரியார் *?*

*இந்து மரபிலும், பௌத்தத்திலும், ஸ்கந்தர், (ஸ்கந்த வழிபாடு) என அழைக்கப்படும் புனிதர், அரபிய வரலாற்றில் சிக்கந்தர் என அழைக்கப்படுகின்றார். இந்த சிக்கந்தரையே அல்குர்ஆன் இஸ்கந்தர் துல்கர்னைன் - என அழைக்கின்றது. இவரை கிறிஸ்தவ வரலாறு Alexander the Great(கிமு,***356-323***) என அழைக்கின்றது.*

இந்த சிக்கந்தர் எனப்படும் துல்கர்னைன் , முழு உலகத்தையே ஆட்சி செய்த நால்வரில் ஒருவர். அவருக்கு ஹிழ்ர் நபியின் உதவி தேவைப்பட்டிருக்கின்றது. அவரும் மரணமற்ற நிரந்தர வாழ்விற்காக முயற்சித்து, ஜீவிய உயிர்நீர் அதிசயத்தை அறிய- ***நபி ஹிழ்ருடன்*** *இணைந்து பயணம் செய்து, அவர்கள்* ***இருவரும் தங்கி இருந்த இடமாகவும் இந்த கதிர்காமம்*** *கருதப்படுகின்றது. இங்குதான் கருவாடாக இருந்த மீனை உயிர்ப்பித்தாகவும் நம்பப்படுகின்றது.*

கொடியேற்றமும் மக்கள் வருகையும்

இங்குள்ள ஹிழ்ர் மகாம் எனும் இடத்திலும், ஃபக்கீர் மடத்திலும் புனித நாட்களில் கொடி ஏற்றப்படுவதுடன், பல்லின மக்களும் ஒன்றிணைகின்றனர். அத்தோடு இந்த இடத்தில், முஸ்லிம்களின் நீண்டகால பல ஜியாறங்களும் பண்பாடும் உண்டு,

இது பற்றி, **1870** ல் ஹம்பாந்தோட்டைக்கு அரசாங்க அதிபராக இருந்த Hudson அவர்களது பல எழுத்து ஆவணங்களில் பதிவுகள் உண்டு. அவர் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும், குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் கால்நடையாகவும், பல வழிகளிலும் வந்து, இந்த இடத்தில் உள்ள கங்கையில், குளித்து, அருந்தி மகிழ்வதாக குறிப்பிடுகின்றார்.அதேபோல் இன்றுள்ள மாணிக்க கங்கையின் புனிதம் "**மாஉல் ஹயாத்**" என்பதில் இருந்து தொடர்பு படுகின்றது, என்ற நம்பிக்கையும் உண்டு.

பால்குடி பாவா ஸியாறம்

கதிர்காமத்தில் புனிதராக கருதப்படும் பால்குடிபாவா தொடர்பான பல அதிசயங்களை, பல்லின மக்களும் நம்புகின்றனர்.அதனால் காலாகாலம் அவர், தத்தமது சமய மரபுகளுக்கு உரியவர்- என உரிமை கோரப்படுவதுமுண்டு.

அந்த வகையில் இதுபற்றி**1991** September **26** அன்று முஸ்லிம் தலைவர் Dr.MC. Kaleel அவர்கள், டெய்லி நியூஸ் பத்திரிகையில் தட்டர்கிரி சுவாமி அவர்களுக்கு எழுதிய மறுப்பறிக்கை மிகவும் ஆதாரப்பூர்வமானது. அதில் பால்குடி பாவா முஸ்லிம் ஸூஃபித்துவ மரபிற்குரியவர், என்பதற்கான பல ஆதாரங்களை அவர் முன்வைக்கின்றார்.

இருப்பியல் ஆதாரம்

கதிர்காமம் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் உரிய புனித இடமாக இருக்கின்ற அதே வேளை, முஸ்லிம்களைப் பொறுத்தவரை, ஆதம் நபி தொடக்கம் பல நபிமார்களினதும், பல அற்புதங்களினதும், இறை நேசர்களினதும் உறைவிடமாகவும் அது உள்ளது.

அந்த வகையில் இந்த நாட்டில் எமது இருப்பிற்கும், ,உலக வரலாற்றில் இஸ்லாத்தின் தோற்றத்திலும்- மிக முக்கிய இடமாக இருந்திருக்கின்றது. அதனைப் பாதுகாப்பதும், அதன் வரலாற்றை உயிர்ப்பிப்பதும், எமது கட்டாய கடமை மட்டுமல்ல, எமது சமயத்தின் தோற்றத்தின்- பல சம்பவ இடங்களைக் பாதுகாத்த நன்மையையும் நமக்குத் தரும்.

எதிர்கால நடவடிக்கை:

இதுபோன்ற பல இடங்களை, சமய தூய்மைவாதிகளின் பிழையான வழிகாட்டல்களினால், முஸ்லிம்கள் இலங்கையில் கைவிட்டு வந்துள்ளனர். இனியும் இவ்வாறான இடங்களைக் கவனிக்காமல் விடுவது- எமது எதிர்கால

இருப்பிற்கான ,பாரிய அச்சுறுத்தலாக அமையும்.எனவேதான் இவ்வாறான இடங்களுக்கு விஜயம் செய்வதுடன், இவை தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொண்டு, எமது எதிர்கால சந்த்தியினரும், இவ்வரலாறுகளை அறிந்து தமது இருப்பை உறுதிப்படுத்திக்கொளள, அனைவரும் ஒன்று பட்டு உதவ வேண்டியது, காலத்தின் கட்டாயக் கடமையாகும்.

அத்துடன், இவ்வாறான இடங்களில் இடம்பெறும் நிகழ்வுகளிலும், விழாக்களிலும் கலந்து கொள்வது, இலங்கையர் என்ற அடிப்படையில் சிங்கள, தமிழ், வேடுவ மக்களுடன் எமது உறவைப் பலப்படுத்துவதற்கான நல்லதொரு சந்தர்ப்பமாக அமைவதுடன் , எமது சமயத்தின் புராதன இடத்தையும் பார்வையிட்ட, பாதுகாத்த பெருமையையும், சந்தோஷத்தையும் எமக்குத் தரும் .அத்தோடு , எமது எதிர்கால சந்த்தியினருக்கான உதவியாகவும் அது அமையும் .

Mufizal Aboobucker ,
Senior Lecturer ,
Department Of Philosophy,
University Of Peradeniya,
14-07-2019.

ஹிளிர் நபி ஸியாரங்கள்











WONDER COCONUT PLANT
THREE PLANTS IN
ONE NUT
DONATED BY
AL-HAJ-M.R. MOHAMAD. J.P.
JEZ - LOOK, MATARA
1ST SEPTEMBER 2001


WONDER COCONUT PLANT
THREE PLANTS IN
ONE NUT
DONATED BY
AL-HAJ-M.R. MOHAMAD. J.P.
JEZ - LOOK, MATARA
1ST SEPTEMBER 2001





Balyaan bin Malkaan Abul Abbaas Sayyidhuna Hizhr Alaihissalaam







இலங்கையில் கதிர்காமம் ஸ்தலத்தில் காஜா **ஹிள்ர் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் & ஸிக்கந்தர் ஃதுல்கர்னைன்** அலைஹிஸ்ஸலாம் அவர்களும் -சுமார் மூன்று மாதங்கள் தரித்திருந்த முபாரக்கான இடங்கள்.....*qit*







கேரளத்தைச் சார்ந்த - அல்லாமா ஸைனுத்தீன் மஹ்தூம் தங்கள் @ நாக மௌலானா அவர்களால் வைக்கப்பட்ட விஷம் உறிஞ்சும் கல் @ ***கதிர்காமம் ஹிள்ர் நபி மகாம்...qit***







الشيخ عبد الجبار علي شاه باوا ولي الله (بخارا)
அஷ்ஷைக் அப்துல் ஜப்பார் அலீஷாஹ் பாவா
வலீயுல்லாஹ் (புகாரா)
ماشاء الله
අෂ්ෂෙක් අබ්දුල් ජබ්බාර් අලිෂාහ් බාවා
වලියුල්ලාහ් (බුකාරා)
ALISHA BAWA VALIULLAH (BUKHARA)






الشيخ عبد الجبار علي شاه باوا ولي الله (بخارا)
அஷ்ஷைக் அப்துல் ஜப்பார் அலீஷாஹ் பாவா
வலீயுல்லாஹ் (புகாரா)
ماشاء الله
අෂ්ෂෙයික් අබ්දුල් ජබ්බාර් අලිෂාහ් බාවා
වලියුල්ලාහ් (බුකාරා)
ABDUL JABBAR ALISHA BAWA VALIULLAH (BUKHARA)


KHALIR MAQAAM
خضر مقام
جدد هذا المقام القديم في سنة ١٩٨٦
THIS ANCIENT MAQAAM IS BEING RE-CONSTRUCTED IN
THE YEAR 1986











Via - kottai pattinam, Sp pattinam-

அரசங்கரை

ஹஜ்ரத் அஸ்செய்யத் அல் அர்ஷுல்லாஹ் ஹிள்ர் நபி வலியுல்லாஹ்

& வலிமார்கள் தர்ஹா ஷரீப்


ஹஜரத் பாத்துமுதது


குதிரை அப்பா


ஹஜரத்
காட்டு மஸ்தான்
ஒலியுல்லாஹ்





ஹிளிர் நபி மகாம்,கதிர்காமம்



மூஸா-ஹிளிர் நபிமார்கள் சந்தித்த ஸ்தலம்/கதிர்காமம்


நாயகம் கிழுறு நபி.அலை.தர்ஹா





⬆ **நபி ஹிள்ர் தர்ஹா** *,கல்லாமொழி-628206, 3 km from kulasehara pattinam & 10 km from tiruchendoor.*

உரூஸ்:ஜ. அவ்வல்'18 ***Cell: 9841428695***




மஹான் ஞான வள்ளல்
ஹஜ்ரத் ஷேக் சுல்தான் அப்துல் காதிர்
குணங்குடி மஸ்தான் சாஹிப்
வலியுல்லாஹ் (ரஹ்)
Ya Rabbee
வாழீ நீடூழி வாழி


ஞான வள்ளல்

பிஸ்மில்லாஹ்

கல்லாமொழி

நாயகம் ஹிலுரு நபி (அலை) அவர்கள் தர்கா

71 ஆம் ஆண்டு கந்தூரி சிறப்பு அழைப்பு

ஹிஜ்ரி 1444 ஜமாஅத்துல் அவ்வல் பிறை 1 (25.11.2022) **வெள்ளிக்கிழமை** பின்னேரம் மாலை 5.00 மணியளவில் **கொடியேற்றுதல்** ஹிஜ்ரி 1444 ஜமாத்துல் அவ்வல்பிறை 18 (13.12.2022) **செவ்வாய்கிழமை** காலை 9.00 மணிக்கு மௌலூது ஆரம்பித்து திக்று அதன்பின் கத்தம் தமாம் செய்து, மார்க்க உரையும் நிகழ்த்தி அன்று லுஹர் தொழுகைக்கு பின் 'துஆ' ஓதி பூர்த்தி செய்து தப்ரூக் (நேர்ஷா) வழங்கப்படும்.

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)...

எல்லாம் வல்ல இறைவன் பேரருளால் நிகழும் ஹிஜ்ரி 1444 ஜமாத்துல் அவ்வல்பிறை 18 அன்று (13.12.2022) **செவ்வாய்கிழமை** காலை 9.00 மணிக்கு நாயகம் ஹிலுரு நபி (அலை) அவர்கள் பெயராலும், செய்யதினா சேகுசிந்தர் மதார் (ஒலி) அவர்கள் பெயராலும் 18 ஆம் **பாத்திஹா இன்ஷா அல்லாஹ்** மிகச்சிறப்பாக நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பித்துத் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தர்ஹாவின் திருப்பணிகளும் ஆக்கப்பணிகளும், சிறப்புற நடைபெற வேண்டியிருப்பதால் ஆக்கபணிகளுக்கு தங்கள் மேலான பொருள் உதவியை கூடுதலாக தந்து, உதவி இறைவன் நல்லருளையும் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்பான ஷபா அத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

ஹக்தார் கந்தூரி நடத்துபவர்

நிர்வாகி. **கு.மு.சே.பரிதா பீவி**

(சுலைஹா உம்மா மகள்)
கல்லாமொழி பள்ளிவாசல், கல்லாமொழி - 628 206.
செல் : 9841428695

ஜன்னத் மர்லியா சமையல்
உடன்குடி. செல் : 9788130372

ஜான் பவர் பிரிண்டர்ஸ் & கார்ட்ஸ். உடன்குடி. செல் : 9842517794



ஹிள்ர் நபி மகாம் உரூஸ் : துல்ஹஜ்-29.

ஹிளிர் நபி துஆக்கள்

ஈமானுடன் மௌத்தாகுவதற்கு

*நபி ஹிள்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களின் திருநாமங்களையும், அவர்களது தகப்பனாருடைய பெயரையும் அறிந்திருப்பது ஈமானுடன் மரணமடைவதற்கு காரணமாகும்(**ஆதாரம்: தஃப்ஸீர் ஸாவீ).***

அவர்களுடைய மூன்று திருநாமங்கள்:

ஹிள்ரு	خضر
பல்யா	بليا
அபுல் அப்பாஸ்	ابو العباس

தந்தையாரின் பெயர்	மல்கான்	ملكان

دعاء الخضر عليه السلام

بسمِ اللهِ ما شآءَ الله لا يَسُوقُ الخَيْرَ إلا الله
بسمِ اللهِ ما شآءَ الله لا يَصْرِفُ السُّوءَ إلا الله
بسمِ اللهِ ما شآءَ الله مَا كانَ مِن نِّعْمَةٍ فَمِنَ الله
بسمِ اللهِ ما شآءَ الله ولا حَوْلَ وَلا قُوَّةَ إلا بالله

[يقال ثلاث مرات]

இந்த **ஹிள்ர் நபி** துஆவை-காலை மாலை @ 3 விடுத்தம் ஓதிவந்தால்-வாழ்வாதாரம் எளிதாகும், தீங்குகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும், இறையன்பு நல்கும்.

நீரில் மூழ்குதல்-தீயில் எரிதல்- திருடு போதல் - பேய்கள்/ஷைத்தான்/விஷ ஜந்துக்களின் தொந்தரவில் நின்றும் கார்மானம் கிட்டும்.

هذا الدعاء ينفع بإذن الله لتيسير الرزق وللحفظ من المكروه، قال ابن عباس رضي الله عنه: "من قالهنّ حين يُصبح وحين يمسي ثلاث مرات ءامنه الله من الغرق والحرق والسرق ومن الشياطين والحية والعقرب"...qit

دعاء خضر عليه السلام يقرأ لخوف العدو وإهلاكه عدد حروفه

يَا قَاهِرُ يَا مُنْتَقِمُ يَا ذَا الْبَطْشِ، اَللّٰهُمَّ كَمَا لَطُفْتَ فِيْ عَظَمَتِكَ دُوْنَ اللُّطَفَاءِ، وَعَلَوْتَ بِعَظَمَتِكَ عَلَى الْعُظَمَاءِ، وَعَلِمْتَ بِمَا تَحْتَ الْأَرْضِ كَعِلْمِكَ بِمَا فَوْقَ عَرْشِكَ، وَكَانَتْ وَسَاوِسُ الصُّدُوْرِ كَالْعَلَانِيَةِ عِنْدَكَ، وَعَلَانِيَةُ الْقَوْلِ كَالسِّرِّ فِيْ عِلْمِكَ، وَانْقَادَ كُلُّ شَيْءٍ لِعَظَمَتِكَ، وَخَضَعَ كُلُّ ذِي سُلْطَانٍ لِسُلْطَانِكَ، وَصَارَ أَمْرُ الدُّنْيَا وَالْآخِرَةِ كُلُّهَا بِيَدِكَ لَا بِيَدِ غَيْرِكَ، اجْعَلْ مِنْ كُلِّ هَمٍّ وَغَمٍّ أَصْبَحْتُ إِذَا أَمْسَيْتُ فِيْهِ فَرَجًا، وَمِنْ كُلِّ ضِيْقٍ مَخْرَجًا.

اَللّٰهُمَّ إِنَّ عَفْوَكَ عَنْ ذُنُوْبِيْ، وَتَجَاوُزَكَ عَنْ خَطَائِيْ، وَسَتْرَكَ عَلَيَّ قَبِيْحَ عَمَلِيْ، أَطْمَعَنِيْ أَنْ أَسْأَلَكَ مَا لَا أَسْتَوْجِبُهُ مِنْكَ، وَمِمَّا قَصَّرْتُ فِيْهِ، فَصِرْتُ أَدْعُوْكَ آمِنًا، وَأَسْأَلُكَ مُسْتَأْنِسًا، وَإِنَّكَ لَمُحْسِنٌ إِلَيَّ، وَإِنِّيْ لَمُسِيْءٌ إِلَى نَفْسِيْ.

فِيْمَا بَيْنِيْ وَبَيْنَكَ تَتَوَدَّدُ إِلَيَّ بِنِعَمِكَ، وَأَتَبَغَّضُ إِلَيْكَ بِالْمَعَاصِيْ، وَلَكِنَّ الثِّقَةَ بِكَ حَمَلَتْنِيْ عَلَى الْجُرْأَةِ عَلَيْكَ، فَعُدْ عَلَيَّ بِفَضْلِكَ وَإِحْسَانِكَ إِلَيَّ، وَتُبْ عَلَيَّ، إِنَّكَ أَنْتَ التَّوَّابُ الرَّحِيْمُ.

وَالْحَمْدُ لِلّٰهِ وَحْدَهُ، وَصَلَّى اللّٰهُ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَآلِهِ وَصَحْبِهِ أَجْمَعِيْنَ.

எமது குழும நூல்கள்

1. முஹ்யித்தீன் ஆண்டகையின்- ஸிர்ருல் அஸ்ரார்.
2. ஞானத்தின் திறவுகோல்.
3. இறைநேசர் இப்ராஹீம் இறைநேசரானதின் இரகசியம்.
4. ஸலவாத்தின் சன்மானம்-5 பாகங்கள்.
5. பகுதாதுப் பகலவனின் படிக்காத பதிவுகள் பதினேழு-2பாகங்கள்.
6. முஹ்யித்தீன் ஆண்டகையின் ஃபுயூளாதுர் ரப்பானிய்யா.
7. காதிரிய்யா காலை மாலை அவ்ராதுகள்.
8. குத்பிய்யா கஸீதாக்கள்.
9. முஹ்யித்தீன் ஆண்டகையின் - துஆ ஸைஃபீ- குறிப்புகளுடன்.
10. குத்பு நாயகத்தின் ஸலவாதுக்கள்.
11. தொழுகை மலர்,ரமலான் மலர்,ஹயாத் மாலை.
12. இஸ்லாத்தின் அஸ்திவாரம்-அபூதாலிப் நாயகம்.
13. முஹ்யித்தீன் ஆண்டகை பாமாலை-25.
14. மலையாள முஹ்யித்தீன் மாலை.
15. குணங்குடி மஸ்தான் ஆண்டகையின் ஞானப்புதையல்.
16. சாயுச்சிய சந்தனச் சாரல்.
17. சிகரக்கலை ஞானம்.
18. சிகரக்கலை அறிவு.
19. சித்தன் போக்கு - சிவன் போக்கு.
20. தென்காசி றஸூல்பீவியின் ஞானாமிர்த சாகரம்.
21. தொண்டி மோனகுரு மஸ்தான் திருப்பாடற்றிரட்டு.
22. கண்டி பீர்மஸ்தானின் மெஞ்ஞான பரிபூரணக் களஞ்சியம்.
23. கருங்குளம் வாப்பா நாயகத்தின் ஞானப்பாடல்கள்.
24. எளிய தமிழில் ஞானப்புகழ்ச்சி.
25. ஞானப்புகழ்ச்சியின் போதமும் பதமும்.
26. மச்சரேகை சித்தன் பாடல்கள்.
27. சிவஞான போதம் சுருக்கம்.
28. மன்னர் முஆவியாவின் மறுபக்கம்.
29. கதீர்கும் பெருநாள்.
30. ஹஸனைன் மௌலித் தமிழில்.
31. திருநெறிநீதம் விஷய சுருக்கம்.
32. தமிழகத்தில் மதாரிய்யா தர்ஹாக்கள்.
33. உரூஸ் நாட்களும் மஜ்லிஸ் தினங்களும்.
34. ஆஷுரா நோன்பு ஓர் ஆய்வு.
35. வாலைகுரு மஸ்தான் பாடல்கள்.
36. மௌனமணி மஸ்தான் பாடல்கள்.
37. வலிமார்களிடம் வஸீலா தேடல் ஸுன்னத்.
38. சூரங்குடி மீரான் தர்வேஷ் பாடல்கள்.
39. ஞானப்புகழ்ச்சியின் சமிக்ஞைகள்.
40. வேதம் கெடுக்கப்பட்டதா? எப்படி?
41. தென்குமரி தர்ஹாக்கள்.

42. ஹிழ்ரு நபி முனாஜாத்து.
43. குத்பு நாயகத்தின் திருநாமங்கள்.
44. முபாஹலா நன்னாள்.
45. காட்டுபாவா காரணக் கும்மி
46. புலவர் நாயகத்தின்-ஐந்து முனாஜாத்து.
47. பக்கீர் மதார் புலவரின்-முஹ்யித்தீன் மணி மாலை.

…………………………………………

குறிப்புகள்


ஹஸ்ரத் ஷெய்கு சுல்தான் அப்துல் காதிர்
குணங்குடி மஸ்தான் சாஹிப் ஒலியுல்லாஹ்(ரலி)



ஜீவன் நபி ﷺ மீது ஜீலானிய்யா ஸலவாத்

Telegram group

https://t.me/+lxYO7iDxz0dlMzk9

Cell no : +91 9443125786